Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 8.00

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஐப்பசி 07 திங்கட்கிழமை (24.10.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 309

# ஜனாதிபதி வேட்பாளர்கள் எவரையும் விடுதலைப்புலிகள் ஆதரிக்க மாட்டார்கள்

## பிரசார நடவடிக்கைகளுக்கு அனுமதிக்கப்படுவர்
## ஊடக இணைப்பாளர் தயா மாஸ்ரர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

***ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் எவரையும் தாங்கள் ஆதரிக்கப்போவதில்லையென விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.***

***இலங்கை அரசியல் தலைவர்கள் தேர்தல்காலத்தில் வாக்குறுதிகளை வழங்கி விட்டு ஏமாற்றுவதை வழக்கமாக கொண்டிருப்பதால் எந்தக்கட்சியையும் ஆதரிக்குமாறு தமிழ் மக்களிடம் தாங்கள் தெரிவிக்கப்போவதில்லையென விடுதலைப் புலிகளின் ஊடக இணைப்பாளர் தயா மாஸ்ரர் தெரிவித்துள்ளார்.***

ஆங்கில வாரப்பத்திரிகையான சண்டே ஒப்சேவருக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் நாம் எந்தக்கட்சியையும் ஆதரிக்கப்போர்வதில்லை. நடுநிலை வகிக்கி முடிபு செய்துள்ளோம். தமிழ் மக்கள் சுதந்திரமாக தங்கள் வாக்குகளை செலுத்தலாம். அரசியல் தலைவர்கள் தேர்தல் காலத்தில் வாக்குறுதிகளை அளித்து விட்டு ஏமாற்றுவை த வழக்கமாக கொண்டிருப்பதால் எந்தக்கட்சியையும் ஆதரிக்குமாறு தமிழ் மக்களிடம் (12 ஆம் பக்கம் பார்க்க)



அமெரிக்காவின் மெக்சிக்கோ நகரில் வீசிய வில்மா சூறாவளிக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் அசைந்தாடும் தென்னை மரங்களை படத்தில் காணலாம்.

## ஜனாதிபதி – ரணில் இன்று முக்கிய சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட் சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற் கும் இடையே இன்று மாலை முக்கிய சந்திப்பு ஒன்று இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா தனது கையெழுத்தில் அனுப்பிய அழைப்பினை ஏற்று ரணில் விக்கிரமசிங்க இச்சந்திப்பில் பங்கேற்கவுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சந்திப்பின்போது நாட்டின் எதிர்காலம், இனப்பிரச்சினைக்கான தீர்வு, நாட்டின் பொருளாதாரநிலை,எதிர்வரும்ஜனாதிபதித்தேர்தல் குறித்துக் கலந்துரையாடப்படவுள்ள தாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபுதி சந்திரிகாவின் இரண்டாவது முறையிலான ஆட்சிக்காலம் எதிர்வரும் நவம்பர் 21 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது.

எதிர்வரும் நவம்பர் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபத் தேர்தலில் புதிய ஜனாதிபதி ஒருவர் தெரிவுசெய்யப்படவுள்ளார்.

இதனடிப்படையில் புதிய ஜனாதிபதி எதிர்வரும் நவம்பர் 22 ஆம் திகதி பதவியேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சூழ்நிலையில் ஜனாதிபதி சந்திரிகா ஐ.தே.கவின் தலைவரைச் சந்திப்பது முக்கிய நிகழ்வென்பது குறிப்பிடத்தக்கது. (ச–04)

## தேர்தல் பிரசார வேலைகளுக்கு பிரதமரிடம் பணம் இல்லையாம்
### அமைச்சர்களின் உதவி நாடுகிறார் அவர்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விடம் போதியளவு நிதி வசதியில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல் விளம்பரத்திற்கும் பிரசாரத்திற்குமென குறிப்பிட்ட தொகையை மகிந்த தனது தம்பியிடம் கொடுத்திருந்தார் என்றும் ஆனால் தற்போது அவரிடம் போதிய பணம் இல்லையென தெரிய வந்துள்ளது.

தேர்தல் விளம்பரத்திற்காக 50 மில்லியன் தம் கைவசம் உள்ளதாகவும் மேலதிகமாக 100 அல்லது 200 மில்லியன் தேவைப்படுவதாகவும் பிரதமரின் சகோதரம் தெரிவித்துள்ளார். சகல வர்த்தக சமூகமும் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிப்பதுடன் அவரின் பிரசாரத்திற்கு நிதி வழங்குகின்றன. எனவே தேவையான நிதியைப் பெறுவது கடினம் என்றும் இரு வழிகளே உண்டு என்றும் அவர் கூறியுள்ளார்.

500 மில்லியனை ஜனாதிபதியிடம் கோருவது என்றும் ஒவ்வொருவரும் 50 மில்லியன் வழங்குமாறு சகல அமைச்சர்களிடமும் கோருவது என்றும் பதில் கூறியுள்ளார்.(ச–6)

## ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க புதிய வாக்காளர் அட்டை அறிமுகம்

(கொழும்பு)

இலங்கையில் முதல் தடவையாக எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் கணினியால் வடிவமைக்கப்பட்ட வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளன. கொழும்பு மேற்கு தேர்தல் தொகுதியில் இம்முறை முதற் தடவையாக இந் நடைமுறை பரீட்சிக்கப்படவுள்ளது.

இதனடிப்படையில் கொழும்பு மேற்கு தேர்தல் தொகுதிவாக்காளர்களுக்கு இரண்டு பக்கங்களை கொண்ட தொலைபேசிகட்டணப் பட்டியலை ஒத்த வாக்காளர் அட்டைகள் அஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்படவுள்ளது.

இது வரை வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்பட்ட வாக்காளர் அட்டைகளை அச்சிடுவதற்கு அதிகசெலவு ஏற்படுவதையடுத்து அவற்றை கடதாசி வடிவில் அச்சிட தீர்மானிக்கப்பட்டுள்ளதாக. தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது சாத்தியமானால் தொடர்ந்து வரும் தேர்தல்களில் இம் முறையினை நடைமுறைப்படுத்த தேர்தல் திணைக்களம் தீர்மானித்துள்ளது. இப் புதிய முறைக்கு கட்சித் தலைவர்கள் அனுமதி வழங்கியுள்ளனர்.

இதனடிப்படையில் குறித்த வாக்காளர் அட்டைகள் எதிர் வரும் 26ஆம் திகதி கொழும்பு மேற்குவாக்காளர்களுக்கு விநியோகிக்கப் படவுள்ளன. (ச–4)

## சுனாமி இடைத்தங்கல் முகாம் மீது நேற்றுக் காலை துப்பாக்கிச் சூடு
### மூன்று சிறுவர்கள் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சாஹிரா வித்தியாலய ஆழிப்பேரலை இடைத்தங்கல் முகாமில் நேற்று முற்பகல் 9.30 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இராணுவ வீரர் உட்பட நான்குபேர் காயமடைந்துள்ளனர்.


காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்த ஏனைய மூவரும் முகாமில் வசிக்கும் பிரபாகரன் இனிதா (வயது 7), தவராஜா பதிகரன் (வயது 4) மற்றும் தவராஜா தனுஷ்கா (வயது 7) ஆகிய சிறுவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த சிப்பாய் உட்பட நான்கு இராணுவச் சிப்பாய்களும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் வழமையான பாதுகாப்புக் கடமையில் இருந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்


# திருமலை எழுச்சிப் பிரகடன நிகழ்வில் இருந்து...











## தேர்தல் வன்முறைகள் பாரியளவு இடம்பெற்றால் துப்பாக்கிச் சூடு நடத்தப் பொலிஸாருக்கு அதிகாரம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பின் போது பாரியளவில் வன்முறைகள் நடைபெற்றால் அதிகபட்ச அதிகாரத்தை பயன்படுத்துவதற்கும் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்படும் என்று பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் ரஞ்சித் அபேசூரிய தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் தேவையான வழிகாட்டல்களை பொலிஸாருக்கு ஆணைக்குழு வழங்கியிருப்பதாகக் கூறிய அவர், சட்டம், ஒழுங்கை நிலைந நாட்டும் அதிகாரிகளுக்கு ஆணைக் குழுவின் பாதுகாப்புக் கிடைக்கும் என்று கூறினார்.

இந்த வழிகாட்டல் அறிக்கையை தயாரித்த போது தேர்தல் ஆணையாளரின் ஆலோசனைகளும் அதற்குப் பெறப்பட்டதாகவும் தேர்தல் பாதுகாப்புத்தொடர்பில் அடுத்த வாரம் மீண்டும் தேர்தல் ஆணையாளரைச்சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாகவும் ரஞ்சித் அபேசூரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அதிகாரிகளின் கடமைகளும் பொறுப்புகளும் என்னவென்பதை உத்தியோகபூர்வமாக அறிவிக்குமாறு ஆணைக்குழுவிடம் தேர்தல் ஆணையாளர் கேட்டுள்ளதாகவும் அதற்கமைய எதிர்வரும் தேர்தலின் போது பொலிஸார் நடந்துகொள்ள வேண்டிய முறை குறித்து விசேட சுற்று நிருபம் ஒன்றை ஏற்கனவே வெளியிட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். அத்துடன் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டிருக்கும் சுற்று நிருபத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களை மீறிச் செயற்படும் காவல்துறையினருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் விசாரணைகளில் அவர்கள் குற்றவாளிகளாக நிருபிக்கப்பட்டால் அவர்களுக்கெதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ற)

## இலங்கை விமானம் இந்தியாவில் விபத்து

(கொழும்பு)

இந்தியாவில் கேரள மாநிலம் கோழிக் கோட்டில் இலங்கை ஏர்லைன்ஸ் விமானம் விபத்திற்குள்ளாகியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இந்திய நேரப்படி காலை 10.40 மணிக்கு இவ் விமானம் புறப்படத் தயாராக இருந்தது.

பயணிகள் ஏறியபின்பு விமானத்தின் கதவுகள் மூடப்பட்டன. அதேநேரத்தில் விமான ட்றக்மோதி ஏணிப்படிகள் சேதமடைந்தன.

இந்தியன் ஏர்லைன்ஸ் விமானநிர்வாகம் இதனை சரிசெய்யும் நடவடிக்கையை மேற்கொண்டது.இந்த சம்பவத்தினால் ட்றக் ஓட்டுநர்ஜெயராஜை இந்திய அரசு இடைநீக்கம் செய்தது.

விமானத்தில் இருந்த 41 பயணிகள் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் மூலம் டோகாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மற்றொரு விமானம் மூலம் 28 பயணிகள் சார்ஜாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். 15 விமானப் பயணிகளை வேறொரு விமானத்தில் கொழும்பிற்கு அழைத்துச் செல்வதாக நிருவாகம் உறுதியளித்ததால் அவர்கள் வீடுகளுக்கு திரும்பினர்.

வெள்ளிக்கிழமை மாலை வரை விமானம் சரிபார்க்கப்படவில்லை. இலங்கை பெறியாளர்கள் குழு கோழிக்கோட்டுக்கு சென்றுள்ளனர்.

(ற)

## முன்னாள் இராணுவ மேஜர் சிறையில் தற்கொலை முயற்சி

(கொழும்பு)

போகம்பரச் சிறைச்சாலையில் உள்ள முன்னாள் இராணுவ மேஜர் தற்கொலைக்கு முயன்றுள்ளார். சாரதிகளை படுகொலை செய்து விட்டு வாகனங்களை கொள்ளையிடும் சம்பவங்கள் தொடர்பாக இவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 19 ஆம் திகதி இரவுதான் அணிந்திருந்த சாரத்தைப் பயன்படுத்தி மேஜர் தற்கொலைக்கு முயன்றுள்ளார். இதனைக் கண்ட சிறைச்சாலை அதிகாரிகள் உடனடியாக கூண்டைத்திறந்து தூக்கில் தொங்கிக்கொண்டிருந்த இவரைக்காப்பாற்றி கண்டி மருத்துவமனையில் அனுமதித்தனர். (ற)

## மதம் தொடர்பான பிரச்சினைகளுக்கு சட்டத்தின் மூலம் தீர்வுகாண முடியாது

## அமெரிக்கா கடும் விசனம்

(கொழும்பு).

இலங்கை அரசாங்கத்தின் மதம் தொடர்பான சட்டங்களுக்கு அமெரிக்கா கடும் எதிர்ப்புத்தெரிவித்துள்ளது.

அண்மையில் தர்மவிஜய அறக்கட்டளை கொழும்பில் நடத்திய கூட்டத்தில் பங்கேற்ற அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சக அதிகாரி ஜோனெல்ல மொராலெஸ் இது தொடர்பில் கூறுகையில்,

மதப்பிரச்சினைகளுக்கும் மதம் தொடர்பான விவகாரங்களுக்கும் சட்டத்தின் மூலம் தீர்வுகாண முடியாது. மத சுதந்திரம் தொடர்பிலான அமெரிக்காவின் கொள்கையும் அதுவல்ல.

அமெரிக்காவின் மத சுதந்திர அமைச்சகமானது மத சுதந்திரம் தொடர்பான செயற்பாடுகளை வெளிநாடுகளில் நடைமுறைப்படுத்தலில் பொறுப்பேற்கிறது. பல்வேறு நாடுகளிலும் மத சுதந்திர நடவடிக்கைகள் தொடர்பாக ஆண்டு தோறும் ஆய்வறிக்கைகளை அது வெளியிட்டு வருகிறது.அமெரிக்காவின் சில நட்பு நாடுகள் மத சுதந்திரத்தை மீறுகின்ற நாடுகளின் பட்டியலில் இல்லை. இலங்கையும் அத்தகைய பட்டியலில் இல்லை. சீனா,வியட்நாம், பர்மா,சவூதிஅரேபியா, ஈரான்,எரித்திரியா ஆகிய நாடுகள் அமெரிக்காவின் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

மதசுதந்திரத்தை வலுப்படுத்தும் நோக்கில் தான் புத்தமதம் செல்வாக்குப் பெற்றிருக்கும் இலங்கைக்கு நாம் பயணம் மேற்கொண்டுள்ளோம்.

இலங்கையில் மதமாற்றம் தொடர்பாக ஒரு சட்டமூலம் தாக்கல்செய்யப்படவுள்ளதாக அறிந்து வருத்தப்பட்டோம். இது தொடர்பில் இரு சட்டமூலங்கள் நாடாளுமன்றில் கொண்டுவரப்படவுள்ளமை வருத்தத்திற்குரியது என்றார்.

(ற)

## ஆசிரியர் வேலை நிறுத்தம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இன்று முதல் ஆசிரியர்களினால் மேற்கொள்ளப்படவிருந்த தொடர்ச்சியான வேலைநிறுத்தப் போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் கல்வித் துறையில் எதிர்நோக்கப்படும் 25பிரச்சினைகளைத் தீர்த்து வைக்குமாறு கோரி இன்று தொடக்கம் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆசிரியர்களின் 25கோரிக்கைகள் தொடர்பாக உயர்மட்டப் பேச்சுவார்த்தையொன்று எதிர்வரும் வியாழக்கிழமை கல்வியமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல்லும் ,உயரதிகாரிகளும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது வடக்கு-கிழக்கு மாகாண ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு பெற்றுக்கொள்ளப்படும் என்று கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர். இதனையடுத்து இன்று முதல் மேற்கொள்ளப்படவிருந்த தொடர்ச்சியான வேலைநிறுத்தப்போராட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் அறிவித்துள்ளார்.

(ற-9)

## 40 வருடங்களாகத் திருத்தப்படாத வீதி

தொல்புரம் கிழக்கு-முன்கோடை வீதி கடந்த 40 வருடங்களாக திருத்தப்படாது குன்றும் குழியுமாக இருந்துவருகின்றது.

இதனால் இவ்வீதியைப் பயன்படுத்தும் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பல்வேறு அசௌகரியங்களையும் சிரமங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

வலி-மேற்குப்பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட இவ்வீதியைப் புனரமைத்துத்தருமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் பல தடவைகள் முறையிட்டும் எந்தவிதமான நடவடிக்கைகளும் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை என்று பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வலி- மேற்கில் பல சிறிய வீதிகள் எல்லாம் சமீபகாலமாக செப்பனிடப்பட்டு வரும்வேளை இவ் வீதி மட்டும் திருத்தப்படாதிருந்து வருவது குறிப்பிடத்தக்கது.(து-49)

# ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றமும் வளர்ச்சியும்

உலக நாடுகள் அனைத்தினதும் பொதுமன்றமாக இயங்கும் ஓர் அமைப்பே ஐக்கிய நாடுகள் சபையாகும். இரண்டாம் உலகப்போர் (1939- 1945) நடைபெற்ற சமயம் பல இலட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர் எண்ணற்ற சிறுவர்கள் அங்கவீனர்களாகினர் பல கோடி சொத்துக்கள் அழிக்கப்பட்டன. இத்தகைய ஒரு கொடிய மூன்றாம் உலகப் போர் போன்ற ஒரு போர் இனிமேல் ஏற்படக்கூடாது என்ற எண்ணம் கொண்ட ஜனநாயகவாதிகளின் உள்ளத்தில் இந்த நிறுவனத்தின் தோற்றம் பற்றிய எண்ணக்கரு பிறந்தது.

முதலாம் உலகப்போர் (1914-1918) நடைபெற்றதன் பின்னர் உலக நாட்டு தலைவர்கள் ஒன்று சேர்ந்து சர்வதேச சங்கம் என்ற அமைப்பை உருவாக்கினர். அதில் பல நாடுகள் அங்கம் வகித்தன ஓரிரு ஆண்டுகளில் அங்கத்துவ நாடுகள் விலகிச் சென்றதனால் இரண்டாவது உலகப்போர் குறுகிய காலத்தில் நடை பெற்றது அதற்குக் காரணம் அவ் அமைப்பின் அதிகாரத் தன்மை குறைவாக காணப்பட்டதாகும்.

ஆனால் ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டு இன்று வரை உலக நாடுகள் அனைத்தையும் வலைப்பின்னல் போல் இணைத்துச் சிறப்பாக அதிகாரத் தன்மையுடனும் உறுதியுடனும் செயற்பட்டு வருகின்றது எனலாம்.

இவ் அமைப்பு உருவாக்கம் பெறுவதற்கு அத்திவாரமாகத் திகழ்ந்து அர்ப்பணிப்புடன் அயராது. உழைத்தவர்களாக.

* ஐக்கிய குடியரசின் ஜனாதிபதி -தியோடர்ருஸ்வெல்ற்

* பிரித்தானிய பிரதமர் வின்சன்ற் சேர்ச்சில்

*சோவியத் ருஷ்யாவின் தலைவர்-ஜோசப் ஸ்டாலின் ஆகியோர் போற்றப்படுகின்றனர்.

ஐக்கிய நாடுகள் சாசனமானது 1945ஏப்ரல் 25ஆம் திகதி உருவாகியது பின்னர் 1945.6.26இல் அமெரிக்காவின் சன் பிரான்சிஸ்கோ நகரில் உலகத் தலைவர்களால் ஐக்கிய நாடுகள் சாசனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.இதில் 50நாடுகள் பங்கேற்றன. 1945ஒக்ரோபர் 24இல் நியூயோர்க் நகரில் வைத்து உலகின் முன்னணி சக்திமிக்க நாடுகளின் தலைவர்கள் பலரால் ஐக்கிய நாடுகள் சபை கோலாகலமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அந்தத்தினமே வருடந்தோறும் " ஐக்கிய நாடுகள் சபை தினமாக" உலகமெங்கும் கொண்டாடப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபைத் தலைமைக காரியாலயம நியூயோர்க் நகரில் அமைந் துள்ளது. இக் கட்டடம் 'டிராக் பில்லர் பிரபு' வழங்கிய நிலத்திலே 1949 ஒக்ரோபர் 24 இல் அடிக்கல் நாட்டப்பட்டு 1951 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

உலக சமாதானத்தைக் குறிக்கும் "ஒலிவ் மரக் கிளை" அதனது சின்னமாகப் பொறிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது பொதுக் கூட்டம் 1946 இல் நடைபெற்றது.

அப்போது 51நாடுகள் மட்டுமே பங்கேற்றன. ஆனால் இன்று 192நாடுகள் அங்கத்துவ நாடுகளாகச் சேர்ந்துள்ளன. 'கிழக்கத் தமோர்'இறுதியாக இணைந்து கொண்டநாடாகும்.

* ஐக்கிய நாடுகள் அமையத்தில் நிரந்தர உறுப்புரிமை கொண்ட நாடுகள்-5

சீனா,.பிரான்ஸ்,.ஐக்கிய இராச்சியம்,ஐக்கிய அமெரிக்கா, ருஷ்யா

* ஐக்கிய நாடுகள் அமையத்தின் உத்தியோக ரீதியான மொழிகள்

சீனம்,பிரான்சு,ஆங்கிலம், ருஷ்ய,ஸ்பாணியா,அரபு

ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான 6 அமைப்புகள்

பொதுச்சபை,பாதுகாப்புச் சபை, பொருளாதார சமூகசபை, நம்பிக்கை பொறுபபுச் சபை, சர்வதேச நீதிமன்றம்,செயலகம்

*ஐக்கிய நாடுகள் அமையத்தின் நோக்கங்கள்

1.சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணுவது.

2.அடிப்படை மனித உரிமைகளையும் சுயகௌரவத்தையும் அடிப்படையாகக் கொண்டு நட் புறவை நாடுகளிடையே விருத்தி செய்வது.

3.சர்வதேச,பொருளாதார, சமூக, கலாசார,மனிதம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க உதவுவதோடு மனித உரிமைகளையும், அடிப்படை உரிமைகளையும் உறுதிப்படுத்தவும் உதவுதல்.

4.சர்வதேச தொடர்புகளை நிலை நிறுத்துவதும் பலமான அடிப்படையில் அமைதியை நிலை நாட்டுவதும்.

*ஐக்கிய நாடுகளின் செயற்பாடுகள்

த.சிவகுமார்
விரிவுரையாளர் யாழ்ப்பாணம்
தேசியகல்வியியற் கல்லூரி

1.குழந்தைகள் உயிர்வாழ்வும் விருத்தியும்

2.சூழல் பாதுகாப்பு

3.மனித உரிமைகள்

4.சுகாதாரமும் மருத்துவ ஆய்வுகளும்

5.வறுமை ஒழிப்பும், பொருளாதார விருத்தியும்

6.சனத் தொகை செயற்பாடுகள்

7.விவசாய அபிவிருத்தியும் மீன்பிடித் தொழிலும்

8.பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதும் அவர்களது அந்தஸ்தினை உயர்த்துவதும்

9.அவசர அழிவுகளுக்கு நிவாரணம் வழங்குதல்

10.விஞ்ஞான தொழில்நுட்ப விருத்தி

11.வான்வழி,கடல்வழிப் பயணங்கள்

12.உலகத் தொடர்பாடல்கள்

13.அமைதிக்காக அணுசக்தியைப் பயன்படுத்தல்

14.தொழிலாளர்கள்,வேலையாட்கள் உரிமைகள்

15.அகதிகளின் நலன்கள்

*ஐக்கிய நாடுகள் அமையத்தின் செயலாளர் நாயகங்கள்

1.திரிக்விலீ -நோர்வே 1945-1952

2. டாக்ஹமர்சீல்ட்-சுவீடன் 1953-1961

3.யூதான்ற் - பர்மா 1961-1971

4.குர்ட் வால்ட்னஹம் - ஒஸ்திரியா 1972-1981

5.ஜாவியர் பெரஸ்டி குவெல்யா-பேரு 1982-1991

6.பூத்ரோஸ் பூத்ரோஸ்காலி-எகிப்து 1992-1996

7.கோபி அனான் கானா 1997-இன்றுவரை

### *ஐக்கிய நாடுகள் அமையமும் இலங்கையும்*

இலங்கையினூடான ஐக்கிய நாடுகளின் தொடர்பு பழமையானது.இத் தொடர்பு 1952இல் ஆரம்பமானது. அது இலங்கை ஐக்கிய நாடுகளின் அங்கத்துவ நாடாக இடம்பெற்ற 1955ஒக்ரோபர் 14ஆம் திகதிக்கு முற்பட்டதாகும்.

இலங்கை சமூக பொருளாதார, கலாசார, கல்வி,மனிதவள மேம்பாடு நிதி, பொருட்கள், தொழில்நுட்ப உதவி என்பவற்றை ஐக்கிய நாடுகள் சபையிடம் இருந்து பெற்றுக் கொண்டது.

ஐக்கிய நாடுகள் அமையத்தின் இணைத் தாபனங்கள் உலக நாடுகளில் செயற்பட்டு வருகிறது. அவற்றில் 13இலங்கையில் செயற்பட்டு தமது பணிகளை ஆற்றி வருகின்றது. அவையாவன:-

உலக விவசாய தாபனம்(FAO), புனருத்தாரணத்துவத்துக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி (IBRD), உலக தொழிலாளர் அமையம்(ILO),சர்வதேச நாணய நிதியம்(IMF),ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித்திட்டம் (UNDP),ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் (UNFPA),ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்வு ஆணையாளர் (UNHCR),ஐக்கிய நாடுகளின் தகவல் நிலையம்(UNIC),ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிலையம் (UNICEF),ஐக்கிய நாடுகளின் கைத்தொழில் அபிவிருத்தித் ஸ்தாபனம் (UNIDO),உலக உணவுத் திட்டம் (WFP),உலக சுகாதார ஸ்தாபனம் (WHO),ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான,கலாசார அமையம் (UNESCO),இலங்கையின் கல்வி கலாசார பண்பாட்டு அபிவிருத்திக்கு ஐ.நா ஸ்தாபனம் மிகச் சிறந்த முறையில் பங்களித்து வருகின்றது. □

## இராசிபலன்

24.10.2005

(ஐப்பசி 7,திங்கட்கிழமை)

சப்தமி முன்னிரவு 7.36 மணிவரை

புனர்பூசம் பின்னிரவு 12.09 மணிவரை

இராகுகாலம்- 7.32 - 9.02 மணிவரை

சுபநேரம் - 12.02 - 1.32 மணிவரை

அமிர்தசித்தம்

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, கலந்துரையாடல். |
| இடபம் | வேலைச்சுமை, கோபப்படுதல், முயற்சி தாமதம், அதிகசெலவு. |
| மிதுனம் | நல்லமுயற்சி, உறவினர் சந்திப்பு, கற்பனை மிகுதி, தொழில் சிந்தை. |
| கடகம் | வீண் செலவு, உறவினர் வெறுப்பு, காரிய அலைச்சல், சயன சுகக்குறைவு. |
| சிங்கம் | காரிய அனுகூலம், பெருமையடைதல், புதிய பொருள் சேர்க்கை, குடும்ப சுகம். |
| கன்னி | பிறர் உதவி, தொழில் நன்மை, காரிய சித்தி, நேர்மை. |
| துலாம் | புதிய திட்டமிடல், பிதாசிந்தை, முயற்சி தாமதம், அதிகபிரயாசை. |
| விருச்சிகம் | பிரயாண பயம், ஆரோக்கியக் குறைவு, சிறிய நன்மை, சோம்பல் நிலை. |
| தனுசு | சென்ற இடத்தில் செல்வாக்கு, காரிய அனுகூலம் நண்பர்கள் சந்திப்பு, பொருள் சேர்க்கை. |
| மகரம் | தொழில் நன்மை, பகைவர் நேசம், முயற்சி கைகூடும், தேகநலன். |
| கும்பம் | உடல் நலக்குறைவு, முயற்சிதாமதம், பண விரயம், குடும்பக் கவலை. |
| மீனம் | கல்வியில் ஆர்வம், மாதா சுகம், ரோக நிலை, முயற்சி தாமதம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.

- வளவன்

## மாணவர் பயிற்சிக்கு இயந்திரப்படகு போரூட் அன்பளிப்பாக வழங்கியது

(பொன்னாலை)

யாழ்.பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தியின் மையத்திற்கு போரூட் நிறுவனம் இயந்திரப்படகு ஒன்றையும் அதற்கான வெளியிணைப்பு இயந்திரங்கள் மற்றும் மீன்பிடி வலைகளையும் வழங்கியுள்ளது.

கடல்வள அபிவிருத்தி நிலையத்தில் கற்கும் மாணவர்களுக்குப் பயிற்சி வழங்குவதற்கே இந்த இயந்திரப் படகு வழங்கப்பட்டதாக கடல்வள அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் எஸ். சித்திரவடிவேல் தெரிவித்தார்.

இந்தப் படகு வழங்கும் வைபவம் கடந்த வியாழக்கிழமை யாழ்.பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தில் அதன் பணிப்பாளர் எஸ்.சித்திரவடிவேல் தலைமையில் இடம்பெற்றது.

இந்தநிகழ்வில் போரூட் நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டு இயந்திரப்பட கினை சம்பிர தாயபூர்வமாக கையளித்தனர். (து-49)

## சிறு விளம்பரம்

### வெளிநாட்டுக்கு செல்வதற்கான வாய்ப்புகள்

"பிரான்ஸ்" நாட்டுக்கு செல்ல 100% உத்தரவாதத்துடன் அனுப்பி வைக்கப்படுகின்றன. (30 வயதிற்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது) உடன் தொடர்பிற்கு- வே.சண்முகலிங்கம், சேச்லேன், திருநெல்வேலி-கிழக்கு, யாழ்ப்பாணம். T.P. 077-9116373.

(9953)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

தேசிய உளவள ஆலோசனை தினத்தை முன்னிட்டு ஆலோசனை விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை காலை 11மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை நூலக மண்டபத்தில் நடைபெறும்.

இக் கருத்தரங்கு நிகழ்வில் வலி தென்மேற்கு பிரதேச செயலக ஆலோசக உதவியாளர்களும் வலிகாமம் வலய உளவளத் துணையாளர்களும் கலந்துகொண்டு கருத்துரையாற்றுவார்கள். (து)

## சீனியர் ஒழுங்கை திருத்தம்

நீண்டகாலமாகத் திருத்தப்படாதிருந்த யாழ்ப்பாணம் சீனியர் ஒழுங்கையினை திருத்தம் செய்வதற்கு யாழ்.மாநாகர சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

திருத்த வேலைக்கான கற்கள் வீதிகளில் பறிக்கப்பட்டுள்ளன. பறிக்கப்பட்ட கற்களினால் அவ் வீதியால் பயணம் செய்வோர் பல அசௌகரியங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாநகரசபை விரைந்து இவ் வீதியைத் திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் மாநகர சபை நிர்வாகத்தினை கோரியுள்ளனர். (து-47)

## சீரற்ற பஸ்சேவை

இலங்கை போக்குவரத்து சபையின் யாழ்ப்பாண அளவெட்டிப் பேருந்து சேவை நீண்டநாட்களாக சீரின்றிக் காணப்படுவதால் மாணவர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

11.25க்கும் 12.25க்குமாக இரு பஸ்சேவைகள் உள்ள போதிலும் அவை 45 நிமிடங்களிற்கு மேல் தாமதமாகவே வருகின்றன. சில சமயம் வராமலும் நின்று விடுகின்றன.இதனால் 'சீசன் ரிக்கெற்' பெற்ற பாடசாலை மாணவர்களும் பிறரும் பெரும் சிரமம் அடைவதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது. (து-51)

## பொதுமக்கள் பாவனைக்கு!

யாழ்.நவீன சந்தையில் பழுதடைந்திருந்த மலசலகூடங்களும் மற்றும் மக்களின் பாவனைக்கு தடைசெய்யப்பட்டிருந்த மலசலகூடங்களும் திருத்தம் செய்யப்பட்டு இப்போது பொதுமக்கள் அனைவரினதும் பாவனைக்கும் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாநகரசபையின் அதிகாரம் பெற்ற அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (து)

## வட.இ.ச. சபைப் பரீட்சைகள் 2006

வட.இ.ச. சபையின் 2006 ஆம் ஆண்டுப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் 20.10.2005 முதல் விற்பனைக்கு வரும்.விண்ணப்ப முடிவுத்திகதி 21.12.2005 விண்ணப்பப்படிவம் ஒன்றின் விலை அறிவுறுத்தல் பிரதியுடன் ரூபா. முப்பது. (30/-) மட்டும்.

விண்ணப்பப்படிவத்தை தபால் மூலம் பெறவிரும்புவோர் ரூபா.30/- பெறுமதியான காசுக்கட்டளையை (மணி ஓடர்) உடன் ரூபா.5.00 பெறுமதியான தபால் தலை ஒட்டிய சொந்த முகவரி எழுதப்பட்ட நீள் (10செ.மீ. 22 செ.மீ) கடித உறையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தேர்வுநாடிகள்,

வட இலங்கைச் சங்கீத சபை,
யாழ். கல்வி அலுவலகம், நல்லூர், யாழ்ப்பாணம்.
எனும் இடத்தில் பெற்றுக்கொள்ளவும்.

(C/1755)

வாசிப்பு மாதம்

வாசியுங்கள் அகவிழி திறக்கும்

வாசிப்போம்! வாசித்ததை யோசிப்போம்!

காசோலை என்றால் அகவிழி என்ற பெயருக்கும் காசுக்கட்டளை எனில் ஹவலக் ரவுணில் மாற்றக் கூடியதாகவும் அனுப்பவும்.

(வருடச் சந்தா ரூ.300 மட்டுமே)

தொடர்புகட்கு:- அகவிழி, இல-03, டொறிங்ரன் அவனியு, கொழும்பு-07.

தொலைபேசி-011 2506272 E-Mail:ahavili@ viluthu.org

ஆசிரியர்களுக்கான மாத இதழ்

அகவிழி

ஆசிரியத்துவநோக்கு...

C-அ-1755

# இன்று ஒருதகவல்

## எச்சரிக்கை

இன்றைய உலகின் பல பாகங்களிலும் நிகழும் இயற்கையின் சீற்றத்தைப் பார்க்கும் போது மனித இனம் அஞ்ச வேண்டிய நிலையில் உள்ளது. இச் சீற்றத்தின் உச்சநிலைக்கு என்ன காரணம்? விஞ்ஞானிகள் கூட சரியான விடை காண முடியாமல் அவதிப்படுகிறார்கள் என்றே சொல்லலாம்.

அண்மைக் காலத்தில் புயற்காற்று,பூகம்பம்,வெள்ளப்பெருக்கு ஆழிப்பேரலை,எரிமலைக்குமுறல்கள்,காட்டுத்தீ என்று எத்தனையோ அனர்த்தங்கள் நிகழ்ந்து பல்லாயிரக்கணக்கான உயிரினங்களையும் பொருளாதார வளங்களையும் அழித்துவிட்டன. இதையறிந்து கொண்டு நாம் நிம்மதியாக வாழ்வது எப்படி? இவை பிற நாடுகளில் இடையே நிகழும் சாதாரண நிகழ்ச்சிகள் தான் என்று சொல்லிவிடலாமா? ஏன்...? அண்மையில் ஆழிப்பேரலை நம் நாட்டின் கரையோரப் பகுதிகளில் தன் விளையாடல்களை காட்டிச் சென்றது தானே. இதில் ஏற்பட்ட பாதிப்புக்களும் பரிதாபங்களும் அதை அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும். ஏனையோர் கற்பனை உருவான திரைப்படங்களைப் பார்த்த மாதிரித்தான்.ஆனால் இவர்களிலும் சிலர் இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டதை அறிந்தவுடன் அதன் விளைவுகளைக் கண்டு மனம் வருந்தி இவை எதற்காக ஏற்படுகின்றன என்ற ஆராய்வில் ஈடுபடுகிறார்கள். இந்த வகையில் நானும் இந்த வகையில்தான் ஒரு ஆன்மீகப் பெரியாரிடம் இதுபற்றிக் கேட்டேன். அவர் தெரிவித்த கருத்துக்களை இங்கு பார்ப்போம். கடந்த காலங்களில் நடந்ததெல்லாம் இறைவனின் சீற்றமே இயற்கையின் சீற்றமாக எமக்குத்தோன்றியுள்ளது. இந்த உலகத்தில் கண்ணிருந்தும் பார்க்கவோ வாய் இருந்தும் பேசவோ காதிருந்தும் கேட்கவோ முடியாதவர்கள் பலர் நம்மிடையே நடமாடுகிறார்கள். இவர்களை இறைவன் ஏன் படைத்தான்? ஒரு புறம் அவர்கள் செய்த பாவத்தை அனுபவித்தார்கள். மறுபுறம் யாராயினும் எவருக்குமோ தீமை செய்யக்கூடாது.மீறினால் உங்களுக்கும் இதேபோன்ற தண்டனைதான் கிடைக்கும் என்ற எச்சரிக்கையாகும்.

இந்த எச்சரிக்கையை மனித இனம் கவனத்தில் எடுக்கிறதா? விஞ்ஞான வளர்ச்சியால் தம்மால் எதையும் செய்ய முடியும் என்ற நிலை இருக்கிறது. செயற்கை முறையில் எல்லா உயிரினங்களையும் தங்களால் படைக்க,காக்க,அழிக்க முற்படுகிறார்கள் இவை யாவற்றிற்குமாக அளவற்ற ஆய்வுகளை செய்வதுடன் மனித இனத்தை அழிக்கும் அளப்பரிய ஆயுதங்களையும் உற்பத்தி செய்கிறார்கள். இதுமட்டுமா? விண்ணுலகம் இறைவனின் வதிவிடம் என்றும் அங்கே இறைவனின் அழைப்பின்றி எவரும் செல்ல முடியாது என்றும் சைவ சித்தாந்தங்கள் கூறுகின்றன. இதை மீறி இன்றைய விஞ்ஞான மனிதர்கள் ஒவ்வொரு கிரகங்களாகச் சென்று ஆராய்ச்சிக்குச் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளமை இறைவனை அவமதிக்கும் செயல் தானே

இது ஒரு பக்கம் இருக்க இன்னொரு பக்கத்தில் என்ன நடக்குகிறது என்று பாருங்கள். சில நாடுகளின் ஆட்சியாளர்கள் நாங்களே வல்லவர்களாகவும் தங்களுக்கு ஏனைய நாட்டினர் அடிபணிய வேண்டும் என்றும் நினைக்கிறார்கள். வேறு சில நாடுகளில் இனம்,மத,மொழி என்ற ரீதியில் பெரும்பான்மையாக இருப்பவர்கள் சிறுபான்மையினரை அடக்கி ஒடுக்க முற்படுகிறார்கள்.

இவ் வேளையில் போராட்டங்கள் தொடங்கி நீதி நேர்மையிலான மனிதாபிமானமற்ற செயல்களையே தோற்றுவிக்கிறது. இதனால் துன்பமடையும் மனிதர்கள் கண்ணீர் சிந்தி இறைவனிடமே கையேந்துகிறார்கள். இவ்வேளையில் மனித குலத்தை எச்சரிப்பதற்காக இறைவனால் இயற்கை ஏவப்படுகிறது என்பதே உண்மையாகும்.

உலகம் தோன்றிய காலத்தில் இருந்தே இயற்கையின் சீற்றம் மனித நடவடிக்கைக்கு ஏற்றவாறு எச்சரிக்கையாக இருந்து வந்துள்ளமையை வரலாற்றுப் பதிவுகள் காட்டுகின்றன. ஆனால் உயிர்ச் சேதங்களோ பொருட்சேதங்களோ சொற்பம் என்று தான் கணிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய இயற்கை அனர்த்தங்கள் எதுவாயினும் பல்லாயிரக்கணக்கான உயிர்ச் சேதங்களையும் கணக்கிட முடியாத பொருட்சேதங்களையும் ஏற்படுத்துகின்றது. இந்த அதிகரிப்புக்கு என்ன காரணம்? உலகம் சுயநலம் கருதிய செயற்பாட்டில் இறைவனை மறந்து மனிதநேயத்தை இழந்து இயற்கைக்கு விரோதமாக நிற்கின்றது என்று சொல்லி முடித்தார் அந்த ஆன்மீகப் பெரியார்.

இப் பெரியார் கூறிய விடயங்களைப் பார்க்கும் போது மனிதர்களின் முறைகேடான செயல்களே இயற்கையின் சீற்றத்திற்குக் கருவாக அமைகிறது என்பது புலனாகிறது. இவ்வுண்மையை உணர்ந்த அரேபிய நாட்டுக்கதை ஒன்றை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

முன்னொரு காலத்தில் அரபு நாடு ஒன்றின் மன்னன் மக்களை கொடூரமான முறையில் சித்திரவதைப்படுத்தினான். இதை எதிர்த்த இளைஞர்களை கொலை செய்வித்தான். தன் விருப்பத்திற்கிணங்காத யுவதிகளை கொடுமைப்படுத்தினான். மக்களின் நலனில் அக்கறையின்றி தன் சுகவாழ்வின் மனதில் கொண்டு மக்களைத் துன்புறுத்தினால் இவையெல்லாம் தாங்க முடியாத மக்கள் இறைதூதுவரான அல்லாவிடம் சொல்லி கையேந்தி நின்ற வேளையில் மன்னனின் வதிவிடப் பகுதியில் மண் மழை பொழிந்ததால் மன்னனும் அவன் ஏவல் ஆட்களும் மாண்டுபோயின. இக்கதை எமக்கு எதை உணர்த்துகிறது? அநியாயம் தலை விரித்தாடினால் இறைவனின் சீற்றம் இயற்கையினால் எம்மையெல்லாம் எச்சரிக்கும் என்பதைத்தானே.

**எழுதுமட்டுவாளூர்**
**எஸ்.எஸ்.காசிப்பிள்ளை**

# இனப்பிரச்சினை இறுதித் தீர்வு குறித்து சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும்

## ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினை தொடர்பிலான இறுதித்தீர்வு குறித்து சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பேசியபோது ரணில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், இனப்பிரச்சினைக்கான இறுதித்தீர்வை செயற்படுத்துவதற்கு முன்னதாக மக்களின் ஒப்புதல் பெறப்படும். தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கள் நிறைவடைந்து இறுதித்தீர்வு உருவாக்கப்பட்டால் அதுகுறித்து சர்வஜன வக்கெடுப்பு நடத்தப்படும்.



எனக்கு அளிக்கப்படும் ஒவ்வொரு வாக்குகளும் ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் இணைந்து செயற்படுவதற்கான வாக்குகளாகக் கருதப்படும்.யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை வரவேற்றுக்கொண்டிருந்த மஹிந்த ராஜபக்ஷ இப்போது எதிரான நிலைப்பாட்டை மேற்கொ ண்டிருந்தமை வருத்தமடையச் செய்கின்றது.

நான் நேர்மையான மனிதன். என்மீது எதுவித குற்றச்சாட்டுக்களும் இல்லை. என் மீதான குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணைகளுக்கு தயாராகவுள்ளேன். ஜனாதிபதித் தேர்தலில் நான் வெற்றிபெற்ற பின்னர் சுதந்திரக் கட்சியினருக்கு எதிராக எதுவித நடவடிக்கையும் ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொள்ளாது. அப்படியான செயற்பாடுகளில் ஈடுபடுவோர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார். (ற)

# ரணிலை வெற்றிபெறச் செய்வதன் மூலமே சு.க வை ஜே.வி.பி யிடமிருந்து மீட்க முடியும்

## கபீர் காசிம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதன் மூலமே சந்திரிகாவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைக் காப்பாற்ற முடியும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் காசிம் தெரிவித்துள்ளார்.கேகாலையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே கபீர் காசிம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றி உறுதியானது என்று தெரிந்த நிலையில்தான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அதிகார மையத்தைக் காப்பாற்ற ஜே.வி.பி திட்டமிட்டு வருகிறது.

அதிகாரத்தைக் காப்பாற்றுவதற்காகவே கடந்த தேர்தலில் சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி அமைத்து ஐக்கிய தேசியக் கட்சியை தோற்கடித்தது ஜே.வி.பி. சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ தனது ஆதரவாளரான மங்கள சமரவீர,ஸ்ரீவதி சூரியராச்சி மூலம் ஜே.வி.பி. விதித்த வலையில் விழுந்துள்ளார். வன்முறைப் பாதைமூலம் தாங்கள் சாதிக்க நினைத்ததை இப்போது வேறு வழிகளில் சாதிக்க ஜே.வி.பி முனைகிறது.

இதன் விளைவாக பண்டாரநாயக்க, திருமதி பண்டாரநாயக்க, சந்திரிகா ஆகியோரால் பாதுகாக்கப்பட்ட சுதந்திரக்கட்சி நீர்த்துப் போய்விடக்கூடும்.

சுதந்திரக் கட்சியுடன் ஜே.வி.பி கூட்டணி அமைத்து குற்றச்செயலைச் செய்துவிட்டதாக ஏற்கனவே அனுரா பண்டாரநாயக்க அதிருப்தியில் உள்ளார்.ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நீண்ட காலத் தலைவர்கள் ஜே.வி.பி-சுதந்திரக் கட்சி கூட்டணியில் வருத்தம் அடைந்துள்ளனர்.

சுதந்திரக் கட்சியை ஜே.வி.பியிடம் இருந்து காப்பாற்ற ஒரேவழி ரணில் விக்கிரமசிங்கவை வெற்றிபெற வைப்பதுதான் என்றார். (ற)

# தமிழர் தாயகப் பிரதேசங்களிலிருந்து இராணுவத்தினர் வெளியேற வேண்டும்

## விஜய டயஸ் வலியுறுத்து

(கொழும்பு)

தமிழர் தாயகமான வடக்கு-கிழக்கிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என்று சோசலிச சமத்துவக் கட்சியின் சார்பில் அதன் ஜனாதிபதி வேட்பாளர் விஜய டயஸ் வலியுறுத்தியுள்ளார்.

அரச தொலைக்காட்சியான ரூபவாகினியில் அவர் ஆற்றிய உரையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.அவர் அதில் மேலும் குறிப்பிடுகையில்,

யுத்தத்தை நிறுத்துவதற்காகவும் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்துக் கொண்டு சர்வாதிகாரத் திட்டத்தை தோற்கடிப்பதாகவும், இந்த நாட்டின் தொழிலாள வர்க்கமும், ஒடுக்கப்பட்ட மக்களும், அரசியல் ரீதியில் சுயாதீனமாக சகல முதலாளித்துவக் கட்சிகளில் இருந்தும் பிரிந்து ஒரு அரசியல் நிலைப்பாட்டில் நின்றுகொள்ள முன்வர வேண்டும். யுத்தத்தை நிறுத்த வேண்டுமானால் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள இராணுவத்தை உடனடியாகவும் நிபந்தனையின்றியும் திருப்பியழைக்க வேண்டும்.

அத்துடன் யாழ்ப்பாணக் குடாநாட்டு பிரதேசத்தில் முன்றில் ஒரு பங்கிற்கும் மேலாக சுற்றி வளைத்து அமைக்கப்பட்டுள்ள உயர்பாதுகாப்பு வலயம் நீக்கப்பட்டு அந்த நிலங்களும் வீடுகளும் அதன் சட்டபூர்வ உரிமையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும். யுத்தத்தை நிறுத்தவும் சர்வாதிகாரத்தைத் தோற்கடிக்கவும் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளைக் காக்கவும் புதிய அரசியலமைப்பு ஒன்று வரையப்பட வேண்டும். அரசியலமைப்பை வரையும் சபை ஒன்று ஜனநாயக ரீதியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட பிரதி நிதிகளால் அந்தப் பணிக்காகவே அமைக்கப்பட வேண்டும் .

இது 1972இல் மற்றும் 78இல் நாடாளுமன்ற ஒழுங்கினை மாற்றி அரசியலமைப்புச் சபை அமைக்கப்பட்டது போல் அன்றி அரசியலமைப்பு மக்கள் மத்தியில் கலந்துரையாடப்படுவதற்கும் மேலாக, அதை வரைவதற்காகவே அமைக்கப்படும் ஒரு பிரதிநிதிகள் சபையாக அமைய வேண்டும் .

இந்த அரசியலமைப்பை வரையும் சபை, இன மத,மொழி போன்ற சகல பேதங்களையும் தூக்கியெறிவதற்காக ஒரு நிலைப்பாட்டை எடுத்தல் வேண்டும். அத்துடன அனைத்து ஒடுக்குமுறையான சட்டங்களையும்,அவசரகாலசட்டங்களையும், மக்கள் பாதுகாப்புச் சட்டத்தையும் மற்றும் பயங்கரவாத சட்டங்களையும் தூக்கியெறிந்து ஜனநாயக உரிமைகளை சமமானதாக்க சகல மக்கள் பிரிவினரதும் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காக ஒரு அரசியலமைப்பு முன்வைக்கப்படல் வேண்டும் .

கடந்த டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி இலங்கையையும் தெற்காசியாவையும் தாக்கிய ஆழிப்பேரலை அழிவின் போது இலட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்தார்கள். பத்து இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் வீடு வாசல்களை இழந்தார்கள்.

இலங்கை அரசாங்கம் இதற்கு எவ்வாறு நடவடிக்கைகளை மேற்கொண்டது? சந்திரிகா குமாரதுங்க தனது விடுமுறையை ஓரங்கட்டிவிட்டு உடனடியாக இலங்கைக்கு வர மறுத்தார். இங்கு வந்தவுடன் அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனம் செய்ததுடன் இலங்கையில் மக்கள் தமது சொந்த வீரத்தைப் பயன்படுத்தி இந்த அழிவில் இருந்து மீள்வதற்காக எடுத்த முயற்சிகளை ஒடுக்க அதை அகற்றுவதற்காக இராணுவ நடவடிக்கைக்கு முன்வந்தார்.

இடம்பெயர்ந்தவர்களுக்கும் வீடுவாசல்களை இழந்தவர்களுக்கும் இன்றுவரை 1,500 வீடுகள் கூட கட்டிக் கொடுக்கப்படவில்லை. அத்துடன் 5000ரூபா கொடுப்பனவையும் சில மாதங்களுக்கு மட்டும் வழங்கி அதையும் கடந்த ஜூன் மாதத்திலிருந்து நிறுத்தி விட்டார்கள்.இது மீண்டும் இந்த அழிவுக்கு இரையாகியுள்ள மக்களின் முன்னிலையில் தேர்தல் வாக்குறுதியாக புத்துயிர் பெற்றுள்ளது.இது ஒரு ஏமாற்றாகும் என்றார். (ற)

### ஜனாதிபதி மீதான தாக்குதல்;

# மேலதிக வழக்கு விசாரணை நவ.29ற்கு ஒத்திவைப்பு

1999ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது சநதிரிகா மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பான சாட்சிகளின் விசாரணை நேற்றுமுன்தினம் நடை பெற்றது.

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி ரோகினி பெரேராவின் முன்னிலையில் சாட்சிகளின் விசாரணைகள் தொடங்கியது. இந்த சம்பவத்தில் குற்றவாளிகளிடம் இருந்து வாக்குமூலங்களைப் பதிவுசெய்த பொலிஸ் பரிசோதகர் நெவில் குருகே சாட்சியமளித்தார். குற்றவாளிகள் மீது எவ்வித அழுத்தமும் பிரயோகிக்கப்படாது அவர்களாகவே தங்களின் வாக்குமூலங்களை வழங்கியதாக அவர் தெரிவித்தார்.

1999ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதி கொழும்பு நகரசபை மைதானத்தில் நடந்த குண்டு வெடிப்பில் 26 பேர் உயிரிழந்தனர். சந்திரிகா உட்பட 87பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாக 4 பேருக்கு எதிராக சட்டமா அதிபர் இந்த வழக்கைத் தொடர்ந்திருந்தார்.

தற்கொலைக் குண்டுதாரியான மலர் எனப்படும் மணிமேகலைக்கு தங்க இடம்கொடுத்தமை மற்றும் அவருக்கு உதவிகளை வழங்கி இந்தத் தாக்குதலுக்குத் திட்டமிட்டமை ஆகியனவே இந் நால்வர் மீதான குற்றச்சாட்டாகும். மேலதிக வழக்கு விசாரணை நவம்பர் மாதம் 29ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ற)

# இரசிகர்களுக்கு பெருவிருந்து அளிக்கப்போகும் இலங்கை - இந்திய அதிரடிஆட்டம்

## பங்குபற்றும் வீரர்கள் ஒரு பார்வை

### இலங்கை

மார்வன் அத்தப்பத்து (அணித்தலைவர்)
மஹேல ஜெயவர்த்தன
சனத் ஜெயசூரியா
குமார் சங்ககார
முத்தையா முரளிதரன்
சமிந்த வாஸ்
திலகரத்ன டில்ஷான்
திலான் சமரவீர
உபுள் சந்தனா
ரஸல் ஆர்னல்ட்
நுவன் சொய்ஸா
உபுள் தரங்க
ஃபர்வீஸ் மஹ்ரூப்
தில்ஹார பெர்னாண்டோ
தில்ஹார லொகு ஹெட்டிகே



***மஹேல ஜெயவர்த்தன***

பிறப்பு- மே 27,1977 கொழும்பு
துடுப்பாட்டம் -வலதுகை
பந்துவீச்சு - வலது கை மித வேகம்
ஒரு நாள் அறிமுகம்- எதிர் சிம்பாப்வே -கொழும்பு,ஜனவரி 24,1998
பங்குபற்றிய போட்டி -186
ஓட்டங்கள்-4791(சராசரி 31.31)



***முத்தையா முரளிதரன்***

பிறப்பு- ஏப்ரல் 17,1972,கண்டி
துடுப்பாட்டம் -வலதுகை
பந்துவீச்சு - வலதுகை புறச் சுழல்
ஒரு நாள் அறிமுகம்- எதிர் இந்தியா-கொழும்பு, ஆகஸ்ட் 12,1993
பங்குபற்றிய போட்டி -250
விக்கெற் -386 (சராசரி 22.22)



***குமார் சங்ககார***

பிறப்பு- ஒக்டோபர் 19, 1979 வத்தளை
துடுப் பாட்டம் -வலதுகை
ஏனைய அம்சம்-விக்கெற்காப்பாளர்
ஒரு நாள் அறிமுகம்- எதிர் பாகிஸ்தான் காலி,ஜுலை5, 2005
பங்குபற்றிய போட்டி -138
ஓட்டங்கள் 3630(சராசரி 33.61)
பிடிகள்-117, ஸ்ரம்ஸ்-35

***திலான் சமரவீர***

பிறப்பு- செப்டெம்பர்22,1976கொழும்பு
துடுப்பாட்டம் -வலதுகை
பந்து வீச்சு- வலது கை புறச்சுழல்
ஒரு நாள் அறிமுகம்- எதிர் இந்தியா, சாஜா நவம்பர் 6,1998
பங்குபற்றிய போட்டி -15
ஓட்டங்கள்-193 (சராசரி 17.54)


***உபுள் சந்தனா***

பிறப்பு- மே 07,1972 காலி
துடுப்பாட்டம் -வலதுகை
பந்து வீச்சு- வலது கை சுழல் பந்துவீச்சு
ஒரு நாள் அறிமுகம்- எதிர் அவுஸ்திரேலியா சாஜா ஏப்ரல் 14,1994
பங்குபற்றிய போட்டி -141
ஓட்டங்கள்-1570 (சராசரி 17.25)
வீக்கெற்றுக்கள்-149 (சராசரி 30.88)



***மார்வன் சாம்ஸன் அத்தப்பத்து*** (அணித்தலைவர்)

பிறப்பு- நவம்பர் 22,1970 களுத்துறை
துடுப்பாட்டம் -வலதுகை
பந்துவீச்சு -வலது கை புறச் சுழல்
ஒரு நாள் அறிமுகம்- எதிர் இந்தியா -நாக்பூர், டிசம்பர் 1,1990
பங்குபற்றிய போட்டி -231
பெற்ற ஓட்டங்கள் -7543(சராசரி 38.09)



***சனத் டெரன் ஜெயசூரியா***

பிறப்பு- ஜுன் 30,1969,மாத்தறை
துடுப்பாட்டம் - இடதுகை
பந்துவீச்சு - இடதுகை சுழல் பந்து வீச்சு
ஒரு நாள் அறிமுகம்- எதிர் அவுஸ்திரேலியா மெல்போர்ன்-டிசம்பர் 26,1989
பங்குபற்றிய போட்டி -339
ஓட்டங்கள் -10122(சராசரி 32.13)
விக்கெற் -267 (சராசரி 36.32)



***ஜோசப் சமிந்தவாஸ்***

பிறப்பு- ஜனவரி 27,1974 மத்துகம
துடுப்பாட்டம் -இடதுகை
பந்து வீச்சு- இடது கை வேகப் பந்து வீச்சு
ஒரு நாள் அறிமுகம்- எதிர் இந்தியா ராஜ்கோட்,பெப்ரவரி 15,1994
பங்குபற்றிய போட்டி -253
விக்கெற்றுக்கள்-326 (சரசரி 26.19)

***ரஸல் பிறேமகுமாரன் ஆர்னல்ட***




பிறப்பு- அக்டோபர் 25,1973 கொழும்பு
துடுப்பாட்டம் -இடதுகை
பந்து வீச்சு- வலது கை அகச் சுழல்
ஒரு நாள் அறிமுகம்- எதிர் தென்னாபிரிக்கா, லாகூர் நவம்பர் 6,1997
பங்குபற்றிய போட்டி -136
ஓட்டங்கள்-3093 (சராசரி 35.55)

***திலகரத்ன டில்ஷான்***

பிறப்பு- ஒக்டோபர் 14,1976 களுத்துறை
துடுப்பாட்டம் -வலதுகை
பந்து வீச்சு- வலது கை புறச்சுழல்
ஒரு நாள் அறிமுகம்- எதிர் சிம்பாவே புலவாஜோ டிசம்பர் 11,1999
பங்குபற்றிய போட்டி -60
விக்கெற்றுக்கள்- 22 (சரசரி 30.95)
ஓட்டங்கள்-927 (சராசரி 25.05)

***நுவான் சொய்ஸா***

பிறப்பு- மே 13,1978 கொழும்பு
துடுப்பாட்டம் -இடதுகை
பந்து வீச்சு- இடது கை வேகப் பந்துவீச்சு
ஒரு நாள் அறிமுகம்- எதிர் நியூஸிலாந்து கிறிஸ்ற்சேர்ச் மார்ச் 25,1997
பங்குபற்றிய போட்டி -89
வீக்கெற்றுக்கள்- 103 (சராசரி 29.64)



***ராகுல் ராவிட்*** (அணித் தலைவர்)

பிறப்பு-ஜனவரி 11,1973 இந்தூர் -மத்திய பிரதேசம்
துடுப்பாட்டம் -வலதுகை
பந்துவீச்சு -வலது கை அகச் சுழல்
ஏனையசிறப்பு-விக்கெற்காப்பாளர்
ஒரு நாள் அறிமுகம்- எதிர் இலங்கை, சிங்கப்பூர், ஏப்ரல் 3,1996
பங்கு பற்றிய போட்டி -265
ஓட்டங்கள் -8429(சராசரி39.20)



***சச்சின் ரமேஷ் டெண்டுல்கர்***

பிறப்பு-ஏப்ரல் 24, 1973 மும்பாய்
துடுப்பாட்டம் -வலதுகை
பந்துவீச்சு -வலது கை கலவைச் சுழல் (அகம்/புறம்) மிதவேகம்
ஒரு நாள் அறிமுகம்- எதிர் பாகிஸ்தான் குஜ்ரன்வாலா டிசம்பர் 18,1989
பங்குபற்றிய போட்டி -348
ஓட்டங்கள் -13642(சராசரி44.43)
விக்கெற் -139 (சராசரி 43.28)



***அஜித் பாலச் சந் த்ரா அகார்கர்***

பிறப்பு-டிசம்பர் 4,1977 மும்பாய்
துடுப்பாட்டம் -வலதுகை
பந்துவீச்சு - வலது கை வேகப் பந்துவீச்சு
ஒரு நாள் அறிமுகம்- எதிர் அவுஸ்திரேலியா கொச்சி ஏப்ரல் 1,1998
பங்குபற்றிய போட்டி -140
ஓட்டங்கள் -1083(சராசரி17.19)
விக்கெற் -217 (சராசரி 27.24)

***ஹர்பஜன் சிங்***



பிறப்பு-ஜு லை 3,1980 ஜலந்தர்
துடுப்பாட்டம் - வலதுதுகை
பந்துவீச்சு - வலது கைபுறச் சுழல்
ஒரு நாள் அறிமுகம்-எதிர் நியூஸிலாந்து
பங்குபற்றிய போட்டி -107
விக்கெற் -127 (சராசரி31.36)



***இர்ஃவான் பதான்***

பிறப்பு-அக்டோபா27,1984 வஹேடா
துடுப்பாட்டம் -இடதுகை பந்துவீச்சு- இடது கை
ஒரு நாள் அறிமுகம்- எதிர் அவுஸ்திரேலியா மெல்போர்ன்
பங்குபற்றிய போட்டி -38
விக்கெற் -63 (சராசரி26.52)

***முரளி கார்த்திக்***

பிறப்பு-செப்டெம்பர் 11,1976 சென்னை
துடுப்பாட்டம் -இடதுகை
பந்துவீச்சு- இடது கை சுழல் பந்து வீச்சு
ஒரு நாள் அறிமுகம்- எதிர் சிம்பாவே ஹதராபார்த் மார்ச் 16,2002
பங்குபற்றிய போட்டி -19
விக்கெற் -19 (சராசரி46.31)

### இந்தியா

ராகுல் ராவிட் (தலைவர்)
வீரேந்தர் சேவோக்
சச்சின் டெண்டுல்கர்
யுவ்ராஜ் சிங்
அஜித் அகார்கர்
ஹர்பஜன் சிங்
இர்ஃவான் பதான்
முரளி கார்த்திக்
மகேந்திரசிங் டோனி
வேணுகோபால் ராவ்
சுரேஷ் ராய்னா
ஜே. பி. யாதவ்
ஸ்ரீகாந்த்
கௌதம் காம்பீர்
ஆர். பி. சிங்



***வீரேந்தர் சேவோக்***

பிறப்பு-அக்டேபர் 20,1979 டில்லி
துடுப்பாட்டம் -வலதுகை ஆரம்ப வீரர்
பந்துவீச்சு -வலது கை அகச் சுழல்
ஒரு நாள் அறிமுகம்- எதிர் பாகிஸ்தான் சண்டிகர் ஏப்ரல் 1,1999
பங்குபற்றிய போட்டி -128
ஓட்டங்கள் -3792(சராசரி31.86)
விக்கெற் -60 (சராசரி 39.89)

***யுவ்ராஜ்சிங்***



பிறப்பு-டிசம்பர் 12,1981 சந்திகார்
துடுப்பாட்டம் -இடதுதுகை
பந்துவீச்சு - இடது கை மித வேகம், சுழல் பந்து வீச்சு
ஒரு நாள் அறிமுகம்- எதிர் கென்யா நைரோபி அக்டோபர் 3,2000
பங்குபற்றிய போட்டி -126
ஓட்டங்கள் -3104(சராசரி31.03)

***மகேந்திரசிங் டோனி***

பிறப்பு-ஜு லை 7,1981 ரஞ்சி
துடுப்பாட்டம் -வலதுகை
களத்தடுப்பு- விக்கெற் காப்பாளர்
ஒரு நாள் அறிமுகம்- எதிர் நியூஸிலாந்து ஹராரே செப்டெம்பர் 6,2005
பங்குபற்றிய போட்டி -19
ஓட்டம் -525 (சராசரி 37.50)

**நோயல்**

***வேணுகோபால் ராவ்***

பிறப்பு-பெப்ரவரி 26,1982 விசாகப் பட்டினம்
துடுப்பாட்டம் -வலதுகை
ஒரு நாள் அறிமுகம்-எதிர் இலங்கை தம்புள்ளை ஜு லை 30,2005
பங்குபற்றிய போட்டி -6
ஓட்டம் -73 (சராசரி 17.59)




***சுரேஷ் ராய்னா***

பிறப்பு-நவம்பர் 27,1986 உத்திர பிரதேசம்
துடுப்பாட்டம் -இடதுகை
பந்துவீச்சு- வலது கை
ஒரு நாள் அறிமுகம்-எதிர் இலங்கை தம்புள்ளை ஜுலை 30,2005
பங்குபற்றிய போட்டி -3
ஓட்டம் -37 (சராசரி 12.33)

(நாளை தொடரும்)

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்பு-2005

(தொடர்ச்சி....)

## கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவு

1.யா/கோ/ 22திரு. சிதம்பரநாதன் கணபதிப்பிள்ளை
2.யா/கோ/50திரு. சிற்றம்பலம் மகேந்திரன்
3.யா/கோ/61திரு. இராமர் நாகலிங்கம்
4.யா/கோ/79திருமதி. புனிதவதி கணபதிப்பிள்ளை
5.யா/கோ/110திரு. அம்பலவாணர் சுப்பிரமணியம்
6.யா/கோ/119திரு. தம்பையா சின்னத்துரை
7.யா/கோ/130திரு. இராமையா செல்லத்துரை
8.யா/கோ/ 140திரு. சின்னையா சேனாதிராசா
9.யா/கோ/144திரு. கந்தையா சண்முகலிங்கம்
10.யா/கோ/159திருமதி. இரத்தினம் துரைசாமி
11.யா/கோ/162திரு. கந்தையா தேவராசா
12.யா/கோ/163திரு. நாகலிங்கம் துரைசிங்கம்
13.யா/கோ/199திரு. இராமுப்பிள்ளை முருகையன்
14.யா/கோ/202திருமதி. நவமணி கனகரத்தினம்
15.யா/கோ/204திரு. செல்லையா நடராசா
16.யா/கோ/221திரு. பொன்னுத்துரை சிவேந்திரன்
17.யா/கோ/227திரு. சதாசிவம் சண்முகநாதன்
18.யா/கோ/236திரு. இளையதம்பி திருநாவுக்கரசு
19.யா/கோ/265திரு. அம்பலவி இராசையா
20.யா/கோ/274திருமதி. செல்லம்மா செல்லையா
21.யா/கோ/287திரு. கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு
22.யா/கோ/290திரு. அப்பாக்குட்டி வேலுப்பிள்ளை
23.யா/கோ/339திரு. மூத்ததம்பி ஆநந்தகிஷ்ணன்
24.யா/கோ/368திரு. சின்னத்தம்பி காசித்தம்பி
25.யா/கோ/371திரு. செல்லையா கந்தசாமி
26.யா/கோ/380திரு. சிவகுரு குகதாசன்
27.யா/கோ/399திரு. பரமு முத்துலிங்கம்
28.யா/கோ/410திருமதி. நல்லம்மா பொன்னுத்துரை
29.யா/கோ/448திரு. சிதம்பரம் மூத்தார்
30.யா/கோ/449திருமதி. சிவபாக்கியம் சண்முகலிங்கம்
31.யா/கோ/464திரு. வேலன் சின்னத்தம்பி
32.யா/கோ/468திரு. வேலன் செல்லக்கண்டு
33.யா/கோ/ 470திரு. ஆறன் சின்னத்தம்பி
34.யா/கோ/498திரு. பரமு தேவராசா
35.யா/கோ/555திருமதி. செல்லம்மா நாகலிங்கம்
36.யா/கோ/568திருமதி. இராசம்மா ஆறுமுகம்
37.யா/கோ/570திரு. இளையதம்பி செல்வராசா
38.யா/கோ/643திருமதி. கண்மணி சுந்தரம்
39.யா/கோ/646திரு. நாகலிங்கம் கணபதிப்பிள்ளை
40.யா/கோ/662திரு. மாணிக்கம் குமரேசு
41.யா/கோ/681திரு. கதிரமலை மாணிக்கம்
42.யா/கோ/ 690திரு. பொன்னர் நடேசன்
43.யா/கோ/697திரு. தம்பு நாகமுத்து
44.யா/கோ/804திருமதி. தங்கரத்தினம் சின்னப்பு
45.யா/கோ/881திருமதி. ஜெயராணி சபாரத்தினம்
46.யா/கோ/916திருமதி. மகேஸ்வரி அம்மா அருமைத்துரை
47.யா/கோ/928திரு. கணபதி நடராசா
48.யா/கோ/932திரு. கனகசபை நாகராசா
49.யா/கோ/965திரு. தம்பிப்பிள்ளை சிவலிங்கம்
50.யா/கோ/974திரு. செல்வம் சதாசிவம்
51.யா/கோ/982திரு. கயிலாயப்பிள்ளை சிவலிங்கம்
52.யா/கோ/983திரு. நாகலிங்கம் சிவநேசன்
53.யா/கோ/1002திரு. கந்தர் சின்னையா
54.யா/கோ/1044திருமதி. வள்ளிப்பிள்ளை இராசா
55.யா/கோ/1074திரு. தம்பிப்பிள்ளை நடராசா
56.யா/கோ/1080திரு. செல்லப்பா மகாலிங்கம்
57.யா/கோ/1081திரு. மாணிக்கம் பொன்னுத்துரை
58.யா/கோ/1118திரு. கந்தையா தில்லாந்துரை
59.யா/கோ/1131திருமதி. ஞானசவுந்தரி பாலசுப்பிரமணியம்
60.யா/கோ/1148திரு. தம்பு ஜெயச்சந்திரன்
61.யா/கோ/1162திரு. தம்பையா கனகசபை
62.யா/கோ/1192திருமதி. கனகம்மா இராசலிங்கம்
63.யா/கோ/1240திரு. கயிலாசபிள்ளை நாகராசா
64.யா/கோ/1245திரு. கந்தன் நல்லான்
65.யா/கோ/1266திருமதி. பார்வதி முத்து
66.யா/கோ/1270திருமதி. பார்வதி தம்பிப்பிள்ளை
67.யா/கோ/1289திருமதி. இராசலட்சுமி குட்டித்தம்பி
68.யா/கோ/1354திரு. பஞ்சாட்சரஐயர் சோமசேகரன்
69.யா/கோ/1375திரு. கணபதிப்பிள்ளை சிவஞானம்
70.யா/கோ/1390திரு. முருகுப்பிள்ளை சின்னராசா
71.யா/கோ/1411திருமதி. செல்லமுத்து பழனிவேல்
72.யா/கோ/1413திரு. சுப்பிரமணியக்குருக்கள் சோமசுந்தரஐயர்
73.யா/கோ/1415திரு. தில்லையம்பலம் செல்வரட்ணம்
74.யா/கோ/1439திருமதி. தெய்வானைப்பிள்ளை ஐயாத்துரை
75.யா/கோ/1440திரு. இளையதம்பி துரைராசா
76.யா/கோ/1453திரு. அன்ரனி அரியரட்டினம் தோமஸ்
77.யா/கோ/1460திரு. கந்தையா தருமராசா
78.யா/கோ/1500திரு. சுப்பிரமணியம் கணேசலிங்கம்
79.யா/கோ/1512திரு. அம்பலவாணர் குமாரவேலு
80.யா/கோ/1535திரு. கந்தையா நவரத்தினம்
81.யா/கோ/1544திருமதி. பரமேஸ்வரி சச்சிதானந்தன்
82.யா/கோ/1546திருமதி. பார்வதி சின்னத்துரை
83.யா/கோ/1557திரு. சின்னப்பா பரமநாதன்
84.யா/கோ/1625திரு. செல்லையா தம்பிராசா
85.யா/கோ/1648திருமதி. தெய்வேந்திரராணி வேலாயுதர்
86.யா/கோ/1668திரு. குட்டிஐயா யோகீஸ்வரன்
87.யா/கோ/1690திரு. வேலுப்பிள்ளை முத்துத்தம்பி
88.யா/கோ/1702திருமதி. பாக்கியம் சோமசுந்தரம்
89.யா/கோ/1703திருமதி. பரமேஸ்வரி கதிர்காமநாதன்
90.யா/கோ/1713திருமதி. பரமேஸ்வரி இராசரத்தினம்
91.யா/கோ/1722திரு. இளையதம்பி இராசரத்தினம்
92.யா/கோ/1732திரு. வேலுப்பிள்ளை செல்வரத்தினம்
93.யா/கோ/1759திரு. பொன்னுத்துரை சிவநேயன்
94.யா/கோ/1766திருமதி. திலகவதி கிருஷ்ணானந்தம்
95.யா/கோ/1792திரு. முத்தையா அப்பையா
96.யா/கோ/1831திருமதி. இலட்சுமிபிள்ளை கந்தசாமி
97.யா/கோ/1844திரு. சின்னக்குட்டி மார்க்கண்டு
98.யா/கோ/1851திரு. அம்பலவாணர் நெல்லிநாகலிங்கம்
99.யா/கோ/1863திருமதி. பராசக்தி வரதராசன்
100.யா/கோ/1872திருமதி. புஸ்பவதி குமாரசாமி
101.யா/கோ/1879திரு. இளையதம்பி பழனி
102.யா/கோ/1900திரு. செல்வன் சீனியன்
103.யா/கோ/1929திருமதி. சிவபாக்கியம் சின்னத்தம்பி
104.யா/கோ/1954திரு. யோசேப் தம்பிஐயா
105.யா/கோ/1974திருமதி. அன்னப்பிள்ளை கந்தன்
106.யா/கோ/1995திரு. நடராசா ஈஸ்வரநாதன்
107.யா/கோ/1996திருமதி. இலச்சுமி தம்பையா
108.யா/கோ/2008திரு. சுப்பிரமணியம் யோகலிங்கம்
109.யா/கோ/2050திருமதி. மகாதேவி அலகேந்திரன்
110.யா/கோ/2066திருமதி. நாகரத்தினம் வேலுப்பிள்ளை
111.யா/கோ/2076திரு. சபாரத்தினம் பத்மநாதன்
112.யா/கோ/2102திருமதி. இராசலட்சுமி சிவநேசன்
113.யா/கோ/2163திரு. நாகலிங்கம் சுந்தரலிங்கம்
114.யா/கோ/2176திருமதி. செல்வரத்தினம் நடராசா
115.யா/கோ/2210திருமதி. தவயோகம் சிற்றம்பலம்
116.யா/கோ/2217திருமதி. தங்கச்சிஅம்மா அருளம்பலம்
117.யா/கோ/2250திரு. இரத்தினம் கந்தசாமி
118.யா/கோ/2268திரு. கந்தன் பசுபதி
119.யா/கோ/2272திரு. வேலுப்பிள்ளை இராசரத்தினம்
120.யா/கோ/2287திரு. கணபதிப்பிள்ளை சுவாமிநாதன்
121.யா/கோ/2288திரு. சின்னையா சிவகுருநாதன்
122.யா/கோ/2295திரு. தம்பிமுத்து செல்வரத்தினம்
123.யா/கோ/2316திரு. சின்னத்தம்பி ஐயாத்துரை
124.யா/கோ/2331திரு. சதாசிவம் மகேந்திரன்
125.யா/கோ/2372திரு. நல்லதம்பி சின்னத்தம்பி
126.யா/கோ/2388திரு. நல்லதம்பி வீரசிங்கம்
127.யா/கோ/2405திரு. சரவணை கிஸ்ணபிள்ளை
128.யா/கோ/2431திரு. இராமலிங்கம் செல்லையா
129.யா/கோ/2432திருமதி. முத்தம்மா சிவானந்தன்
130.யா/கோ/ 2440திரு. மாணிக்கம் தியாகராசா
131.யா/கோ/2472திரு. கணபதிப்பிள்ளை கந்தசாமி
132.யா/கோ/2473திரு. முத்துசாமி கணேசன்
133.யா/கோ/2522திரு. சின்னவன் அப்பையா
134.யா/கோ/2568திரு. கிருஷ்ணபிள்ளை வீரசிங்கம்
135.யா/கோ/2577திரு. நாகலிங்கம் பாலகிருஷ்ணன்
136.யா/கோ/2608திரு. கணபதிப்பிள்ளை குலநாயகம்
137.யா/கோ/2634திரு. நாகமுத்து கந்தப்பு
138.யா/கோ/2640திரு. செல்லத்துரை கணபதிப்பிள்ளை
139.யா/கோ/2650திருமதி. மகேஸ்வரி வல்லிபுரம்
140.யா/கோ/2663திரு. சிவணடியார் மச்சகேந்திரன் (சிவபாதம்)
141.யா/கோ/2699திருமதி. பொன்னம்மா கந்தையா
142.யா/கோ/2709திரு. மாதர் இராசா
143.யா/கோ/2720திரு. சரவணமுத்து இரத்தினம்
144.யா/கோ/2723திருமதி. இராசமணி சதாசிவம்
145.யா/கோ/2735திருமதி. இராசமணி நவரத்தினம்
146.யா/கோ/2755திரு. சித்திவிணாயகம் சிவசுப்பிரமணியம்
147.யா/கோ/2759திருமதி. செல்லபாக்கியம் குமார்
148.யா/கோ/2784திரு. சந்தன் சின்னத்தம்பி
149.யா/கோ/2802திருமதி. சிலோஜனா சபாவதி
150.யா/கோ/2834திருமதி. தவமணி நாகலிங்கம்
151.யா/கோ/2836திருமதி. தவமணி இராசையா
152.யா/கோ/2837திரு. மாதர் தம்பித்துரை
153.யா/கோ/2844திரு. நாகலிங்கம் தம்பிராசா
154.யா/கோ/2851திரு. சின்னத்தம்பி தர்மலிங்கம்
155.யா/கோ/2861திருமதி. தனபாக்கியம் பாலசிங்கம்
156.யா/கோ/2875திருமதி. விஜயலக்சுமி ரட்ணம்
157.யா/கோ/2879திரு. வேலுப்பிள்ளை வீரசிங்கம்
158.யா/கோ/2894திருமதி. அன்னலட்சுமி சுப்பிரமணியம்
159.யா/கோ/2919திரு. மயிலு கதிர்காமு
160.யா/கோ/2943திருமதி. புண்ணியவதி சிங்கரத்தினம்
161.யா/கோ/2951திருமதி. இரத்தினாம்பிகை துரைநாயகம்
162.யா/கோ/3007திரு. சுப்பிரமணியம் தருமலிங்கம்
163.யா/கோ/3029திருமதி. யோகமலர் பாலசிங்கம்
164.யா/கோ/3040திருமதி. அன்னம்மா செல்லன்
165.யா/கோ/3063செல்வி. ஜெயலக்சுமி நாகராஜா
166.யா/கோ/3098திரு. சின்னத்தம்பி காங்கேஸ்வரன்
167.யா/கோ/3120திரு. நாகர் மாணிக்கம்
168.யா/கோ/3166செல்வி. பரமேஸ்வரி கதிரேசு
169.யா/கோ/3168திருமதி. பூமாதேவி மதியாபரணம்
170.யா/கோ/3215திரு. சீனிவாசகம் நவரத்தினம்
171.யா/கோ/3217திரு. கந்தையா சிவலிங்கம்
172.யா/கோ/3280திருமதி. தெய்வானை பொன்னர்
173.யா/கோ/3298திரு. செல்லப்பா தெட்சணாமூர்த்தி
174.யா/கோ/3305செல்வி. விமலாஜனி கந்தையா
175.யா/கோ/3312திரு. இளையதம்பி பத்மநாதன்
176.யா/கோ/3330திரு. மார்க்கண்டு காங்கேசு
177.யா/கோ/3342திருமதி. பராசக்தி கார்த்திகேசு
178.யா/கோ/3383திருமதி. பரஞ்சோதி சிவஞானம்
179.யா/கோ/3406திருமதி. றோசம்மா கணேசு
180.யா/கோ/3423திரு. தம்பு சுப்பிரமணியம்
181.யா/கோ/3439திருமதி. செல்லமுத்து அருளானந்தம்
182.யா/கோ/3458திரு. இராசசிங்கம் சகாதேவன்
183.யா/கோ/3479திரு. இரத்தினம் தவராசா
184.யா/கோ/3506திரு. இராசையா அழகரத்தினம்
185.யா/கோ/3547திரு. நடேசர் கண்ணலிங்கம்
186.யா/கோ/3550திரு. தம்பிஐயா கந்தநாதன்
187யா/கோ/3574திரு. கந்தையா முத்துக்குமாரசாமி
188.யா/கோ/3579திருமதி. மனோன்மணி சின்னராசா
189.யா/கோ/3591திருமதி. சிவபாக்கியம் நடராசா
190.யா/கோ/3628திருமதி. இராசமணி இராசரத்தினம்
191.யா/கோ/3748திருமதி. சின்னம்மா நடேசன்
192.யா/கோ/3785திரு. மனுவேல்பிள்ளை ஜேசுதாசன்
193.யா/கோ/3788திருமதி. யூலியற்பற்றிசியா ஜெயராஜா
194.யா/கோ/3789திருமதி. கௌசலாதேவி குணரத்தினம்
195.யா/கோ/3801திரு. குழந்தைவேலு கணேசபிள்ளை
196.யா/கோ/3802திருமதி. கமலாதேவி தனிகாசலம்
197.யா/கோ/ 3812திருமதி. குணவதி கிருஷ்ணபிள்ளை
198.யா/கோ/3827திருமதி. லீலாவதி சின்னத்துரை
199.யா/கோ/3870திருமதி. பராசக்தி சோதிராசா
200.யா/கோ/3884திருமதி. பாக்கியம் சுப்பிரமணியம்
201.யா/கோ/3890திருமதி. பிலோமினா திருச்செல்வம்
202.யா/கோ/3895திருமதி. ரோகினியம்மா சபாரத்தினம்
203.யா/கோ/3899திரு. ஆசைப்பிள்ளை இரத்தினம்
204.யா/கோ/3903திரு. சூரன் இராசு
205.யா/கோ/3910திரு. கனகபூஷணம் சண்முகநாதன்
206.யா/கோ/3931திரு. குமாரசாமி சிவகுருநாதன்
207.யா/கோ/3969திரு. நாகமுத்து சுப்பிரமணியம்
208.யா/கோ/3975திரு. சிங்கராசா துரையப்பா
209.யா/கோ/3988திரு. பெரியதம்பி தம்பிராசா
210.யா/கோ/4002திரு. வேலுப்பிள்ளை வீரவாகு
211.யா/கோ/4052திரு. சண்முகநாதன் நடேசபிள்ளை
212.யா/கோ/4078திரு. நல்லதம்பி சற்குணநாதன்
213.யா/கோ/4081திரு. பொன்னர் செல்லத்துரை
214.யா/கோ/4089திரு. செல்லத்துரை சுந்தரலிங்கம்
215.யா/கோ/4093திரு. இராமலிங்கம் செகசோதி
216.யா/கோ/4167திருமதி. கண்ணகை கந்தையா
217.யா/கோ/4198திரு. கணபதிப்பிள்ளை வல்லிபுரம்
218.யா/கோ/4204திரு. கணபதிப்பிள்ளை முருகேசு
219.யா/கோ/4226திரு. கந்தையா நடராசா
220.யா/கோ/4258திரு. முருகுப்பிள்ளை இரத்தினம்
221.யா/கோ/4264திரு. கந்தையா இராசகுலசிங்கம்
222.யா/கோ/4318திரு. பெரியதம்பி சின்னத்துரை
223.யா/கோ/4346திரு. கந்தையா நடராசா
224.யா/கோ/4388திரு. கதிரேசு முருகேசு
225.யா/கோ/4400திரு. வேலுப்பிள்ளை நாகலிங்கம்
226.யா/கோ/4424திரு. தென்னர் சின்னத்தம்பி
227.யா/கோ/4441திரு. பெரியதம்பி செல்லத்துரை
228.யா/கோ/4516திருமதி. சரஸ்வதி ஆறுமுகம்
229.யா/கோ/4606திரு. ஐயம்பிள்ளை தர்மலிங்கம்
230.யா/கோ/4683திருமதி. மனோன்மணி பொன்னுத்துரை
231.யா/கோ/4714திரு. தம்பு நடேசு
232.யா/கோ/4715திருமதி. நவமணி கதிரவேலு
233.யா/கோ/4717திரு. தம்பிப்பிள்ளை நாகலிங்கம்
234.யா/கோ/4733திரு. மாதன் சண்முகசுந்தரம்
235.யா/கோ/4754திரு. சின்னையா இராசா
236.யா/கோ/4764திரு. தம்பு துரைசிங்கம்
237.யா/கோ/4772திருமதி. இராசமணி சுந்தரலிங்கம்
238.யா/கோ/4784திருமதி. சோதிப்பிள்ளை வேலுப்பிள்ளை
239.யா/கோ/4790திரு. வேலாயுதம் சந்திரசேகரம்பிள்ளை
240.யா/கோ/4791திருமதி. சரஸ்வதி இராசரத்தினம்
241.யா/கோ/4800திருமதி. சிவப்பி வேலன்
242.யா/கோ/4821திரு. காசிப்பிள்ளை சின்னையா
243.யா/கோ/4867திரு. கந்தையா வேலாயுதம்
244.யா/கோ/4884திரு. வல்லிபுரம் யோககுலசிங்கம்
245.யா/கோ/4899திரு. குமாரசாமி பாலசுப்பிரமணியம்
246.யா/கோ/4913திரு. சேதுபதி கனகசபாபதி
247.யா/கோ/4921திரு. சிவலை கிருஷ்ணன்
248.யா/கோ/4945திரு. இளையகுட்டி சுப்பிரமணியம்
249.யா/கோ/4974திரு. முதலி கந்தையா
250.யா/கோ/ 5036திரு. ஆபிரகாம் இப்பன்
251.யா/கோ/5045திரு. செல்வரத்தினம் கணேசு
252.யா/கோ/5049திரு. சண்முகம் அமீர்தலிங்கம்
253.யா/கோ/5094திரு. கனகசபை குககுமாரராசா
254.யா/கோ/5121திருமதி. மகேஸ்வரி சுப்பிரமணியராசா
255.யா/கோ/5129திரு. சிவகுருநாதன் நித்தியானந்தன்
256.யா/கோ/5145திரு. முத்தையா பேரம்பலம்
257.யா/கோ/5154திருமதி. பூமணி இரத்தினம்
258.யா/கோ/5191திருமதி. இராசமணி ஐயாத்துரை
259.யா/கோ/5193திருமதி. செல்வநாயகி வேலாயுதபிள்ளை
260.யா/கோ/5215திரு. கனகசபை ஸ்கந்தராசா
261.யா/கோ/5223திருமதி. சிவபாக்கியம் இராசஇரத்தினம்
262.யா/கோ/5244திரு. நமசிவாயம் சுந்தரமூர்த்தி
263.யா/கோ/5271திருமதி. தெய்வானைப்பிள்ளை கந்தவனம்
264.யா/கோ/5282திரு. செல்லையா வெற்றிவேலு
265.யா/கோ/5294திரு. செல்லத்துரை யோகரட்ணம்
266.யா/கோ/5298திரு. செல்லன் அப்புத்துரை
267.யா/கோ/5304திரு. சின்னத்தம்பி வல்லிபுரம் பாலசிங்கம்
268.யா/கோ/5367திரு. வேலன் தம்பையா
269.யா/கோ/5419திரு. சின்னத்தம்பி செல்லத்துரை
270.யா/கோ/5420திரு. நாகமுத்து சீவரத்தினம்
271.யா/கோ/5435திருமதி. மகேஸ்வரி சின்னப்பு
272.யா/கோ/5443திருமதி. செங்கமலம் துரைசிங்கம்
273.யா/கோ/5466திருமதி. திலகேஸ்வரி குணசிங்கம்
274.யா/கோ/5473திரு. வயிரமுத்து வேலாயுதபிள்ளை
275.யா/கோ/5490திருமதி. ஞானரத்தினம் செல்வரத்தினம்
276.யா/கோ/5504திருமதி. கனகம்மா பொன்னுத்துரை
277.யா/கோ/5510திரு. அருணாசலம் கனகசபைதருமலிங்கம் கிருஷ்ணரசா
278.யா/கோ/5522திரு. வீரகத்திப்பிள்ளை முத்துலிங்கம்
279.யா/கோ/5529திருமதி. நவலட்சுமி தவராசா
280.யா/கோ/5546திருமதி. புஷ்பமலர் மயில்வாகனம்
281.யா/கோ/5550திரு. அப்பாத்துரை பஞ்சலிங்கம்
282.யா/கோ/ 5576திருமதி. சோதிமணி சச்சிதானந்தர்
283.யா/கோ/5596திருமதி. சிவயோகம் சுப்பிரமணியம்
284.யா/கோ/5626திரு. நவரட்ணம் தவநீதராஜா
285.யா/கோ/5658திருமதி. அன்னம்மா இரத்தினம்
286.யா/கோ/5690திருமதி. சின்னப்பிள்ளை செல்லையா
287.யா/கோ/5691திரு. கதிரன் பொன்னுத்துரை
288.யா/கோ/5698திருமதி. சிவபாக்கியம் தம்பிராசா

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்பு-2005

289.யா/கோ/ 5706திரு. கதிரன் செல்லன்
290.யா/கோ/5707திரு. தேவகேசன் தியடோர்
291.யா/கோ/5725திரு. வல்லிபுரம் ஆறுமுகம்
292.யா/கோ/5740திரு. சின்னையா ஜெகநாதன்
293.யா/கோ/5742திரு. சபாபதி கனகராசா
294.யா/கோ/5745திரு. பொன்னுத்துரை குணசிங்கம்
295.யா/கோ/5748திருமதி. கனேஸ்வரி மகேசதயலிங்கம்
296.யா/கோ/ 5762திருமதி. கமலாம்பிகை கிருஷ்ணசாமி
297.யா/கோ/5818திருமதி. பத்மாவதி கனகரட்னம்
298.யா/கோ/5825திரு. பொன்னுத்துரை இராமச்சந்திரன்
299.யா/கோ/5828திருமதி. இராசபூரணி செல்வரத்தினம்
300.யா/கோ/5830திரு. பொன்னுத்துரை சிங்கராசா
301.யா/கோ/5845திரு. இரத்தினம் செல்வநாயகம்
302.யா/கோ/ 5861திரு. இராசையா சுப்பிரமணியம்
303.யா/கோ/5868திரு. கந்தையா சுப்பிரமணியம்
304.யா/கோ/5920திருமதி. பூரணம் இராசன்
305.யா/கோ/5959திருமதி. அரியமலர் முத்துராசா
306.யா/கோ/5987திரு. தம்பிப்பிள்ளை கனேசபிள்ளை
307.யா/கோ/5989திரு. சரவணமுத்து கந்தசாமி
308.யா/கோ/5994திரு. செல்லையா குஞ்சிதபாதம்
309.யா/கோ/6000திருமதி. மீனாம்பிகை கணேசலிங்கம்
310.யா/கோ/6037திரு. நடராசா பரமசிவம்
311.யா/கோ/6053திருமதி. இராசாத்தி கந்தையா
312.யா/கோ/6054திரு. தம்பையா இரத்தினசபாபதி
313.யா/கோ/6076திரு. செல்லையா சின்னத்துரை
314.யா/கோ/6088திரு. சிவக்கொழுந்து சீனிவாசகம்
315.யா/கோ/6137திரு. சாமிநாதக்குருக்கள் பாலசுந்தரக்குருக்கள்
316.யா/கோ/6182திரு. செல்லத்துரை கணேசமணி
317.யா/கோ/6210திருமதி. உதயமணி மயில்வாகனம்
318.யா/கோ/6211திரு. சீனிவாசகம் சற்குணானந்தம்
319.யா/கோ/6255திருமதி. அன்னலட்சுமி நடராசா
320.யா/கோ/6289திருமதி. ஞானபூபதி அருளம்பலம்
321.யா/கோ/6303திருமதி. மகேஸ்வரி வேலாயுதபிள்ளை
322.யா/கோ/6308திருமதி. பரமேஸ்வரி இளையதம்பி
323.யா/கோ/6310திரு. சிவக்கொழுந்து சுப்பிரமணியம்
324.யா/கோ/6321திருமதி. முத்தம்மா இரத்தினசபாபதிப்பிள்ளை
325.யா/கோ/6346திரு. மரியாம்பிள்ளை பீலிப் இராஜநாயகம்
326.யா/கோ/6350திருமதி. புவனேஸ்வரி செல்லத்துரை
327.யா/கோ/6391திரு. செல்லையா தங்கராசா
328.யா/கோ/6422திருமதி. நகுலேஸ்வரி சதாசிவம்
329.யா/கோ/6427திருமதி. சிதம்பரநாயகி கார்த்திகேசு
330.யா/கோ/6442திருமதி. திரேசாஜீற்றம்மா அமரசிங்கம்
331.யா/கோ/6449திருமதி. செல்லாச்சிப்பிள்ளை சச்சிதானந்தன்
332.யா/கோ/6485திரு. கந்தையா கனகரத்தினம்
333.யா/கோ/6509திரு. வல்லி செல்லையா
334.யா/கோ/6518திருமதி. அரியம் சிவசம்பு
335.யா/கோ/6522திருமதி. சிவநாயகி நடராசா
336.யா/கோ/6589திரு. தம்பு செல்வராசா
337.யா/கோ/6608திருமதி. சிவாம்பிகை திருநாவுக்கரசு
338.யா/கோ/6617திருமதி. திரேசம்மா மாட்டீன்
339.யா/கோ/6621திரு. நாகன் கிருஷ்ணன்
340.யா/கோ/6623திருமதி. பவளம் தில்லையம்பலம்
341.யா/கோ/6632திருமதி. இராசம்மா வேலுப்பிள்ளை
342.யா/கோ/6640திருமதி. அருளம்மா திருச்செல்வம்
343.யா/கோ/6651திருமதி. அன்னலட்சுமி துரைராசா
344.யா/கோ/6663திருமதி. லீலாவதி நடராஜபிள்ளை
345.யா/கோ/6726திரு. வேலாயுதம் பரராஜசிங்கம்
346.யா/கோ/6753திரு. பெரியதம்பி செல்லத்துரை
347.யா/கோ/6764திருமதி. விஜயலட்சுமி முத்துத்தம்பி
348.யா/கோ/6789திருமதி. தனபாக்கியம் கதிரவேலு
349.யா/கோ/ 6793திருமதி. கனகம்மா வினாசித்தம்பி
350.யா/கோ/6800திரு. சண்முகம் பரஞ்சோதி
351.யா/கோ/6823திரு. நாகமணி பொன்னுத்துரை
352.யா/கோ/6830திரு. சின்னட்டி முருகன்
353.யா/கோ/6841திரு. வினாசித்தம்பி வேலாயுதபிள்ளை
354.யா/கோ/6866திரு. பொன்னையா கந்தையா
355.யா/கோ/6880திருமதி. இராசம்மா பொன்னையா
356.யா/கோ/6885திரு. சுப்பிரமணியம் கோபாலகிருஷ்ணன்
357.யா/கோ/6893திருமதி. அன்னப்பிள்ளை ஐயாத்துரை
358.யா/கோ/ 6911திரு. வேலன் இராசதுரை
359.யா/கோ/6931திரு. அ.மரியம்பிள்ளை இராசேந்திரம்
360.யா/கோ/ 6934திரு. மார்க்கண்டு நடராசா
361.யா/கோ/6935திருமதி. சிவக்கொழுந்து பொன்னுத்துரை
362.யா/கோ/6961திருமதி. மகேஸ்வரி பழனித்துரை
363.யா/கோ/6982திரு. சித்தன் சண்முகம்
364.யா/கோ/6983திரு. முருகன் சின்னத்துரை
365.யா/கோ/7000திரு. நாகமுத்து சின்னத்தம்பி
366.யா/கோ/7041திரு. சின்னத்தம்பி குருநாதபிள்ளை
367.யா/கோ/ 7049திருமதி. செல்லம்மா அருமைநாயகம்
368.யா/கோ/7081திருமதி. சிவமலர் மகேந்திரா
369.யா/கோ/7089திரு. இராமலிங்கம் ஏபிரகாம் இரத்தினராஜா
370.யா/கோ/7126திருமதி. குணமணி செல்லத்துரை
371.யா/கோ/7138திருமதி. இராசலட்சுமி சிவசாமி
372.யா/கோ/7217திருமதி. பத்மாசனி இராதாகிருஷ்ணன்
373.யா/கோ/7271திரு. சின்னத்தம்பி ஜெயராசசிங்கம்
374.யா/கோ/7274திரு. கனகரத்தினம் சபாரத்தினம்
375.யா/கோ/7277திருமதி. லட்சுமி இராசையா
376.யா/கோ/7298திருமதி. தெய்வானை கிருஸ்ணன்
377.யா/கோ/7332திரு. வைத்திலிங்கம் துரைராஜா
378.யா/கோ/7353திருமதி. சின்னம்மா இராமலிங்கம்
379.யா/கோ/7427திரு. முருகன் சைமன்
380.யா/கோ/7441திருமதி. இரத்தினம் இராசலிங்கம்
381.யா/கோ/7451திரு. ஆழ்வான் தில்லையம்பலம்
382.யா/கோ/ 7454திருமதி. நாகேஸ்வரி முருகேசு
383.யா/கோ/7462திருமதி. பூரணம் சுப்பிரமணியம்
384.யா/கோ/7516திருமதி. அகிலாண்டேஸ்வரி துரைராசா
385.யா/கோ/7522திரு. வயித்திலிங்கம் இராசரத்தினம்
386.யா/கோ/7541திரு. வைரமுத்து நடராசா
387.யா/கோ/7556திரு. சின்னத்தம்பி தம்பிப்பிள்ளை
388.யா/கோ/7586திரு. வய்ிரவன் ஆசீர்வாதம்
389.யா/கோ/7587திரு. சுப்பையா பொன்னம்பலம்
390.யா/கோ/7600திரு. சரவணமுத்து சங்கரப்பிள்ளை
391.யா/கோ/7659திரு. தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம்
392.யா/கோ/7672திருமதி. செல்லமுத்து துரைராசா
393.யா/கோ/7679திருமதி. சற்குணசோதிமலர் சந்திரசேகரம்
394.யா/கோ/7689திருமதி. பொன்னம்மா சின்னத்தம்பி
395.யா/கோ/7730திரு. வல்லி இரத்தினம்
396.யா/கோ/7753திரு. கந்தையா சுப்பிரமணியம்
397.யா/கோ/7778திரு. வயிரவன் கந்தையா
398.யா/கோ/7781திரு. தம்பையா அருணாசலம்
399.யா/கோ/7818திரு. செல்லையா சண்முகலிங்கம்
400.யா/கோ/7820திரு. வேலுப்பிள்ளை செல்லத்துரை
401.யா/கோ/7823திரு. சின்னத்துரை விநாயகமூர்த்தி
402.யா/கோ/7828திரு. சின்னப்பு கந்தையா
403.யா/கோ/7832திரு. வைரவன் வல்லி
404.யா/கோ/7835திருமதி. சரஸ்வதி வைரமுத்து
405.யா/கோ/7859திரு. வல்லிபுரம் பொன்னம்பலம்
406.யா/கோ/ 7889திரு. சுந்தரம் நித்தியானந்தன் .
407.யா/கோ/7935திருமதி. இராசம்மா நவரத்தினம்
408.யா/கோ/7978திரு. வயித்தி சீனியர்
409.யா/கோ/7980திரு. ஞானப்பிரகாசம் திருச்செல்வம்
410.யா/கோ/7987திரு. ஆறுமுகம் கணேசு
411.யா/கோ/8000திருமதி. இலட்சுமி சின்னத்தம்பி
412.யா/கோ/8002திருமதி. துரைமணி பொன்னையா
413.யா/கோ/8067திருமதி. செல்வரத்தினம் ஆறுமுகம்
414.யா/கோ/8080திருமதி. நாகேஸ்வரி கந்தையா
415.யா/கோ/8098திரு. முத்து பொன்னுத்துரை
416.யா/கோ/8125திரு. சீனியன் வைத்திலிங்கம்
417.யா/கோ/8158திரு. வைத்தி இளையதம்பி
418.யா/கோ/8231திரு. பழனி முருகேசு
419.யா/கோ/8261திரு. தாமோதரம்பிள்ளை கந்தசாமி
420.யா/கோ/8297செல்வி. சரஸ்வதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை
421.யா/கோ/8301திருமதி. கனகம்மா முத்துராஜா
422.யா/கோ/8319திருமதி. கமலாதேவி சிவசுப்பிரமணியம்
423.யா/கோ/8350திருமதி. யோகம்மா கோவிந்தசாமி
424.யா/கோ/8396திரு. மயில்வாகனம் பரமானந்தம்
425.யா/கோ/8416திரு. சின்னத்துரை நாகேந்திரம்
426.யா/கோ/8453திரு. இளையதம்பி கனகசபை
427.யா/கோ/8504திரு. கணபதி மயிலு
428.யா/கோ/8542திரு. கந்தர் பரமு
429.யா/கோ/8570திருமதி. தங்கமுத்து கந்தசாமி
430.யா/கோ/8584திருமதி. வள்ளிநாயகி இராசதுரை
431.யா/கோ/8613திருமதி. சாந்தநாயகி இலங்கைநாயகம்
432.யா/கோ/8620திரு. கதிர்காமு இராஜலிங்கம்
433.யா/கோ/8708திரு. செல்லையா சிவஞானம்
434.யா/கோ/8713திரு. பொமியான் ஆசீர்வாதம்
435.யா/கோ/8718திரு. சீனியன் சிவமயம்
436.யா/கோ/ 8724திரு. சுப்பர் சோமு
437.யா/கோ/ 8731திருமதி. செல்வநாயகி இராசதுரை
438.யா/கோ/ 8775திரு. கந்தையா மகாதேவா
439.யா/கோ/8789திரு. கந்தையா இரத்தினம்
440.யா/கோ/8801திரு. செல்லையா கனகலிங்கம்
441.யா/கோ/8807திரு. சிவலை செல்லத்துரை
442.யா/கோ/ 8809திரு. மார்க்கண்டு தம்பிராசா
443.யா/கோ/8830திருமதி. சரஸ்வதி கந்தையா
444.யா/கோ/ 8833திருமதி. பொன்னம்மா செல்லத்துரை
445.யா/கோ/8843திரு. இராமலிங்கம் இரத்தினம்
446.யா/கோ/ 8844திரு. தம்பிமுத்து தங்கராசா
447.யா/கோ/8848திரு. இளையவர் இராசதுரை
448.யா/கோ/8866திருமதி. இராசம்மா சின்னத்தம்பி
449.யா/கோ/8872திரு. பொன்னர் நடேசு
450.யா/கோ/8884திருமதி. சவுந்தரம் இராசரத்தினம்
451.யா/கோ/8898திருமதி. பொன்னமா சேனாதிராசா
452.யா/கோ/8901திரு. இளையவி பாலசிங்கம்
453.யா/கோ/8905திரு. வைரமுத்து தவராசா
454.யா/கோ/8908திரு. வைரமுத்து தங்கராசா
455.யா/கோ/8911திரு. வேலுப்பிள்ளை கார்த்திகேசு
456.யா/கோ/8913திருமதி. ஜெகதீஸ்வரி வீரசிங்கம்
457.யா/கோ/8977திருமதி. யோகேஸ்வரி தில்லையம்பலம்
458.யா/கோ/9022திருமதி. தவமணி தம்பிஐயா
459.யா/கோ/9029திருமதி. மனோன்மணி இராசதுரை
460.யா/கோ/9044திருமதி. கனகாம்பிகை தம்பு
461.யா/கோ/9045திருமதி. பார்வதி மாணிக்கம்
462.யா/கோ/9071திரு. பொன்னம்பலம் நல்லையா
463.யா/கோ/9085திருமதி. மாரிமுத்து பழனிவேல்
464.யா/கோ/9106திரு. மயில்வாகனம் இராஜேந்திரா
465.யா/கோ/9112திருமதி. சரஸ்வதி இரத்தினம்
466.யா/கோ/9139திருமதி. தங்கம்மா விசாகநாதன்
467.யா/கோ/9150திருமதி. பரமேஸ்வரி ஆறுமுகம்
468.யா/கோ/9151திரு. சின்னத்தம்பி அரியநாயகம்
469.யா/கோ/9211திரு. கந்தையா வேலாயுதம்
470.யா/கோ/9224திரு. கறுத்தான் செல்லத்துரை
471.யா/கோ/9276திரு. பொனிப்பாஸ் அல்வின்
472.யா/கோ/9312திருமதி. நாகபூசணி தம்பிராசா
473.யா/கோ/9337திரு. சின்னவன் கனகன்
474.யா/கோ/ 9372திரு. இராமலிங்கம் விவேகானந்தம்
475.யா/கோ/ 9374திருமதி. தங்கலட்சுமி செல்வரட்ணம்
476.யா/கோ/9449திருமதி. இராஜேஸ்வரி சரவணமுத்து
477.யா/கோ/9454திரு. கதிரவேலு இரத்தினம்
478.யா/கோ/9479திரு. கந்தையா அருளையா
479.யா/கோ/9553திரு. வேலுப்பிள்ளை அருணசலம்
480.யா/கோ/9567திருமதி. வள்ளியம்மாள் இராசநாயகம்
481.யா/கோ/9583திருமதி. நோசம்மா இராசதுரை
482.யா/கோ/ 9585திரு. தம்பையா காராளசிங்கம்
483.யா/கோ/9590திரு. தம்பிஐயா சாம்பசிவம்
484.யா/கோ/ 9655திரு. தம்பிஐயா சிவஞானம்
485.யா/கோ/9678திரு. பெரியான் பொன்னன்
486.யா/கோ/ 9812திருமதி. பூமணி சுப்பையா
487.யா/கோ/9865திருமதி. ஆச்சிமுத்து கனகசபை
488.யா/கோ/9867திருமதி. இராசேஸ்வரி சிவசுப்பிரமணியம்
489.யா/கோ/9895திரு. கந்தன் கிருஷ்ணன்
490.யா/கோ/9930திரு. சங்கரப்பிள்ளை சண்முகநாதன்
491.யா/கோ/9932திரு. சின்னத்தம்பி சிவஞானசுந்தரம்
492.யா/கோ/9940திரு. பொன்னுத்துரை சின்னத்துரை
493.யா/கோ/9979திருமதி. இராசமணி தம்பிப்பிள்ளை
494.யா/கோ/10017திருமதி. ருக்மணி கணபதிப்பிள்ளை
495.யா/கோ/10057திருமதி. தங்கமுத்து வல்லி
496.யா/கோ/10098திரு. கணபதிப்பிள்ளை அரசரத்தினம்
497.யா/கோ/10127திரு. கந்தையா துரைராஜா
498.யா/கோ/10239திரு. வைரமுத்து பொன்னம்பலம்
499.யா/கோ/10269திரு. சிதம்பரக்கவுண்டர் இலட்சுமணன்
500.யா/கோ/10287திரு. சிதம்பரி வேலுப்பிள்ளை
501.யா/கோ/10341திரு. வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம்
502.யா/கோ/10356திரு. துரையன் குணராசா
503.யா/கோ/10370திரு. கதிரன் செல்லன்
504.யா/கோ/ 10374திருமதி. துரைக்குஞ்சு சின்னையா
505.யா/கோ/10396திரு. சரவணமுத்து குமாரசாமி
506.யா/கோ/ 10409திரு. செல்லப்பா பரமசாமி
507.யா/கோ/10422திரு. செல்லையா நல்லையா
508.யா/கோ/10427திரு. சின்னத்தம்பி தம்பிஐயா

## நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவு

1.யா/ந/20திரு. தம்பு லோகநாதபிள்ளை
2.யா/ந/44திருமதி. சீத்தாலக்சுமி சுப்பிரமணியசிவம்
3.யா/ந/68திருமதி. விசாலாட்சி குகதாசன்
4.யா/ந/93திரு. கந்தப்பிள்ளை கோபாலசிங்கம்
5.யா/ந/96திரு. வைத்திலிங்கம் கோபாலகிருஷ்ணா
6.யா/ந/104திரு. பொன்னையா கனகலிங்கம்
7.யா/ந/113திரு. முருகேசு நவரத்தினராசா
8.யா/ந/124திரு. தியாகராசா பரமநாதன்
9.யா/ந/141திரு. முருகேசு சந்திரசேகரம்
10.யா/ந/175திருமதி. கண்மணி நல்லையா
11.யா/ந/179திரு. முருகன் கந்தையா
12.யா/ந/ 201திரு. கந்தையா சந்திரசேகரம்
13.யா/ந/217திருமதி. தவமணி கணேசமூர்த்தி
14.யா/ந/272திரு. மாணிக்கம் இரத்தினம்
15.யா/ந/282திரு. கனகமணி சிவலிங்கம்
16.யா/ந/293திரு. இராசையா சந்திரசேகரம்
17.யா/ந/ 313திரு. துரைராசா பாலசுந்தரம்
18.யா/ந/315திரு. சுப்பையாபிள்ளை பாலகிருஷ்ணன்
19.யா/ந/325திரு. அம்பலவாணர் கனகசபை
20.யா/ந/357திரு. பொன்னையா நல்லையா
21.யா/ந/ 358திருமதி. நாகம்மா சுப்பிரமணியம்
22.யா/ந/370திரு. சின்னையா பஞ்சலிங்கம்
23.யா/ந/ 456திரு. கனகரத்தினம் வேலாயுதபிள்ளை
24.யா/ந/485திரு. சோமசுந்தரம் கங்காதரன்
25.யா/ந/505திரு. ஐயாத்துரை பத்மநாதன்
26.யா/ந/519திரு. செல்வவிநாயகமூர்த்தி சிவலிங்கம்
27.யா/ந/528திரு. பொன்னுத்துரை சண்முகராஜா
28.யா/ந/ 549திரு. இரத்தினசபாபதிஐயர் வெங்கடேசஐயர்
29.யா/ந/585திரு. வைத்திலிங்கம் நல்லையா
30.யா/ந/639திருமதி. புனிதவதி திருநாவுக்கரசு
31.யா/ந/644திரு. செல்லையா தில்லைநாதன்
32.யா/ந/681திரு. நாகலிங்கம் குணலிங்கம்
33.யா/ந/697திருமதி. கமலாம்பிகை பரமநாதன்
34.யா/ந/ 698திரு. கந்தையா குமாரசாமி
35.யா/ந/703திரு. பொன்னுத்துரை குமாரகுலசிங்கம்
36.யா/ந/710திருமதி. இராசலட்சுமி குணரட்ணம்
37.யா/ந/730திரு. சிவசோதி முத்துக்குமாரு
38.யா/ந/739திருமதி. தைரியலட்சுமி நடராசா
39.யா/ந/759திரு. கணபதிப்பிள்ளை நவரத்தினம்
40.யா/ந/766திரு. இரத்தினசிங்கம் பத்மநாதன்
41.யா/ந/777திருமதி. புவனேஸ்வரி மயிலானந்தன்
42.யா/ந/797திருமதி. இராஜேஸ்வரி நவரத்தினம்
43.யா/ந/ 812திரு. தம்பியப்பா சபாநாதன்
44.யா/ந/833திரு. பரமேஸ்வரக்குருக்கள் சோமாஸ்கந்தக்குருக்கள்
45.யா/ந/834திரு. தம்பு செல்லத்துரை
46.யா/ந/870திரு. துரையப்பா தியாகராசா
47.யா/ந/879திரு. கனகரெத்தினம் தெட்ஷணாமூர்த்தி
48.யா/ந/ 933திரு. கணபதிப்பிள்ளை குணசிங்கம்
49.யா/ந/942திரு. இராமலிங்கம் குமாரு
50.யா/ந/945திருமதி. விஜயராணி கந்தசாமி
51.யா/ந/955திரு. செல்லையா கோடீசுவரன்
52.யா/ந/965திரு. முத்துக்குமாரு லோகமாணிய திலகன்
53.யா/ந/971திரு. அப்பாக்குட்டி மகேந்திரன்
54.யா/ந/ 975திரு. மயில்வாகனம் முருகையா
55.யா/ந/1039திரு. பழனித்துரை சிவலிங்கம்
56.யா/ந/1066திரு. செல்வரத்தினம் சிவன்தாசன்
57.யா/ந/1096திரு. இராஜரட்ணம் திருச்செல்வம்
58.யா/ந/1131திருமதி. பகவதி சண்முகராஜா
59.யா/ந/1139திருமதி. இராமநாதன் ஞானம்பிகை
60.யா/ந/1148திருமதி. இராசமணி கனகசிங்கம்
61.யா/ந/1189திரு. பழனி மார்க்கண்டு
62.யா/ந/1206திரு. சின்னப்பு நடேசபிள்ளை
63.யா/ந/1221திரு. சண்முகம் பரமேஸ்வரன்
64.யா/ந/1333திருமதி. பூமணி கதிர்காமத்தம்பி
65.யா/ந/1334திருமதி. பொன்னம்மா பொன்னுத்துரை
66.யா/ந/1355திரு. பொன்னுத்துரை தனபாலசிங்கம்
67.யா/ந/1358திரு. நாகலிங்கம் துரைசிங்கம்
68.யா/ந/1364திரு. செல்லப்பா வல்லிபுரம்
69.யா/ந/1376திருமதி. கனகம்மா கனகசபை

(தொடரும்)

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

## லெனின்



(1870 -1924) சோவியத் ரஷ்யாவின் தந்தை எனப் போறறப்படுபவர் லெனின். இவர் சோவியத் குடியரசை நிறுவிய வர். பொதுவுடைமை (த.க)க கொள்கையை ரஷ்ய மக்களி டையே பரப்பி, அதை நடை முறையில் செயலாக்க முயன் றவர். இவர் சிறந்த சிந்தனையாளராகவும், அரசியல் மேதையாகவும் விளங்கினார்.

இவரது இயற்பெயர் விளாடிமிர் இலியிச் உலியனாவ் (Vladimir Ilyich Ulyanov) என்பதாகும். மூன்றாம் அலெக்சாண்டர் மன்னரைக் கொல்ல 1887இல் நடந்த சதியில் பங்குகொண்டதாகக் கூறி இவருடைய தமைய னாரை அரசாங்கம் தூக்கிலிட்டது. இந்நிகழ்ச்சி லெனினை அரசாங்கத்தை எதிர்க்கும் ஒரு புரட்சிக்காரராக ஆக்கியது.

இந்தச் சமயத்தில் ரஷ்ய மக்களிடையே பெரும் மனக் கசப்பு நிலவியது. பெரும்பாலான மக்களுக்கு வாக் குரிமை இல்லை; வேறு அரசியல் உரிமைகளும் இல்லை. குடியானவர்கள் மிகுந்த ஏழ்மையில் இருந்தார்கள். பிரபுக் களும், நிலவுடைமையாளர்களும் செல்வச் செழிப்புடன் வாழ்ந்தார்கள். இந்நிலைமையை மாற்றியமைக்க நடுத்தர நிலையிலுள்ள குடும்பத்தினர் அரசியல் குழுக்களை அமைக் கலானார்கள்.

லெனின் சட்டக் கல்வி பயின்றார். சமூகச் சீர்திருத்தங் களில் மிகுந்த நாட்டங்கொண்டு மார்க்ஸின் (Karl Marx, த.க) பொதுவுடைமைத் தத்துவத்தை நனகு கற்றார்; அதை ரஷ்யாவில் பரப்பிப் புரட்சியை உண்டாக்க உறுதிபூண் டார்.

லெனின் 1893இல் செயின்ட் பீட்டர்ஸ் பர்கு நகரத்திற் குச் சென்று, 'தொழிலாளர் விடுதலைக் கழக'த்தை நிறு வித் தமது பிரசாரத்தை நடத்தலானார். இதனால் 1895இல இவர் கைதுசெய்யப்பட்டு சைபீரியாவுக்கு மூன்று ஆண்டு களுக்கு நாடு கடத்தப்பட்டார். அங்கு 1898இல் தம்மு டைய இயக்கத் தோழியாக இருந்த 'குருப்ஸ்காயா' (Krupskaya) என்பவரை மணந்தார்.

1900இல் லெனின் சுவிட்ஸர்லாந்து, ஜேர்மனி, இங்கி லாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்குச் சென்றார். முனிச் (ஜேர்மனி), லண்டன் ஆகிய நகரங்களிலிருந்து 'தீப்பொறி' (Iskra) என்ற பத்திரிகையை வெளியிட்டார். இப்பத்திரிகை ரஷ்யாவுக்கு இரகசியமாகக் கொண்டு செல்லப்பட்டது.

1903இல் ரஷ்ய சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சி யின் கூட்டம் இலண்டனில் கூடியது. இக்கூட்டத்தில் இக் கட்சி, தொழிலாளர்களின் போல்ஷவிக் கட்சி (Bolisheviks) என்றும், நடுத்தர வர்க்கத்தினரின் மென்ஷவிக் கட்சி (Mensheviks) என்றும் இரண்டாக உடைந்தது.

லெனின் போர்ஷவிக் கட்சியின் தலைவரானார்.

1905இல் நடந்த ரஷ்ய - ஜப்பான் போரில் ரஷ்யா தோற்றது. அரசு மீது தொழிலாளர்களும், குடியானவர்களும் வெறுப் படைந்தனர். லெனின் மாறுவேடத்தில் ரஷ்யாவுக்கு வந்து மக்களைப் புரட்சி செய்யத் தூண்டினார். ஆனால் புரட்சியை அரசு அடக்கி விட்டது. 1907இல் லெனின் சுவிட்ஸர்லாந் துக்குத் தப்பிச்சென்று, அங்கிருந்தே ரஷ்யாவில் அரசியல் கிளர்ச்சிகளை நடத்தி வந்தார்.

முதல் உலக யுத்தம் 1914இல் தொடங்கியது. 1917 பெப்ர வரியில் ஜேர்மனியுடன் ரஷ்யா போரிட்டுக்கொண்டிருந்த போது, சில நகரங்களில் புரட்சி மூண்டது. அவ்வாண்டு ஏப்ர லில் லெனின் ரஷ்யாவுக்கு வந்தார். ஆட்சியைக் கைப் பற்ற முயன்று, தோற்று, மீண்டும் தலைமறைவானார். எனி னும் நான்கு மாதங்களில் இவருடைய புரட்சிக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது. ரஷ்யாவின் புதிய அரசாங்கத்திற்கு லெனின் தலைவரானார். இதுவே உலகில் தோன்றிய முதலாவது பொ வுடைமை அரசாங்கம் ஆகும்.

ரஷ்யாவில் பொதுவுடைமைத் திட்டங்களை நிறைவேற்று வதில் லெனின் மிகத் தீவிரமாக ஈடுபட்டார். 1918இல் இவரைக் கொல்ல நடந்த முயற்சியிலிருந்து உயிர் தப்பினார். எனினும் கடுமையான உழைப்பினால் இவர் உடல் நலிந்தது.

1924 ஜனவரி 21இல் இவர் இறந்தார். இவருடைய உடல் தைலமிடப்பட்டு மாஸ்கோவில் ஓர் அழகான கண்ணாடி அறையில் அனைவரும் பார்க்ககூடிய முறையில் வைக் கப்பட்டுள்ளது. இன்றும் அது அழியாமல் உள்ளது. செயின்ற் பீட்டர்ஸ்பர்கு நகரம் இவரது நினைவாக 'லெனின் கிராடு' என இன்று அழைக்கப்படுகிறது.

## நல்லதையே நினைப்போம்

அரிச்சலூர் கிராமத்தில் வெள்ளைச்சாமி, கருப்பசாமி என்ற இருவர் வசித்து வந்த னா. இருவரது வடுகளும் பக்கம் பக்கமாய் இருந்தன. வெள்ளைச்சாமி- பெயர் தான் வெள்ளை மனசெல்லாம் கறுப பாக இருந்தது. தய எண்ணம் கொண்டவன்.

கறுப்பசாமியோ இவனுக்கு எதிர். நல்ல எண்ணம் உடை யவன். பிறருக்கு நன்மை செய் வதால் ஊரில் இவனுக்கு நல்ல பெயர் இருந்தது. இத னால் கருப்பசாமியைக் கண் டாலே வெள்ளைச்சாமிக்குப் பிடிககாது. யாரையாவது ஏமாற்றி, எப்படியாவது வசதி யாக வாழவேண்டும் என்பதே அவன் எண்ணமாய் இருந்தது.

ஒருநாள் வெள்ளைச்சாமி ஆற்றங்கரையின் ஓரத்தில் உள்ள மரத்தடியில் படுத்திருந் தான். அப்போது தேவதை அவன் முன்னாள் தோன்றி னாள். உடனே பரபரப்பாக எழுந்து தேவதையைப் பார்த் தான். தேவதை கேட்டதெல் லாம் கொடுக்குமாம் என்று யாரோ சொன்னதை மனதில் வைத்து தேவதையிடம் ஒரு விணணப்பத்தை வைத்தான்.

தேவதை அவனிடம், "நீ கேட்பதெல்லாம் தருகிறேன் ஆனால் ஒரு நிபந்தனை. உனக்கு ஒரு மடங்கு கொடுத் தால் உன் பக்கத்து வீட்டுக் காரன கறுப்பசாமிக்கு இரண்டு மடங்கு தருவேன். என்ன வேண் டும் யோசித்துச் சொல்" என்று கூறி மறைந்தாள்.

வீட்டிற்கு வந்த வெள்ளைச் சாமி தூக்கம் வராமல் யோசிக் கிறான். 'என்ன கொடுத்தாலும என்னை விட அந்த கறுப்ப சாமிக்கு இரண்டு மடங்கு கிடைக்குமே. என்ன கேட்பது?' குழம்பினான்.

அவனது தீய எண்ணம் நல்ல காரியத்தை யோசிக்க விடவில்லை. எனக்கு ஒரு வடு கிடைத்தால் அவனுக்கு இர ணடு வடு கிடைக்கும் எனக்கு ஒரு தோட்டம் கிடைத்தால் அவனுக்கு இரண்டு தோட் டங்கள் கிடைக்கும். அவன் என்னை விட நனறாக இருக் கக்கூடாது என்றே யோசித் தான். அவனது தய எண்ணம் பொல்லாத யோசனையைக் கொடுத்தது.

மறுநாள் அதே ஆற்றங்கரை மரத்தடிக்கு சென்றான். தேவதை வந்தாள்.

"வெள்ளைச்சாமி நன் றாக யோசித்தாயா? என்ன வேண்டும் சொல்" என்று கேட் டது. அவன் சொன்ன பதில் தேவதையை அதிர்ச்சி கொள்ள வைத்தது.

அதாவது அவன், "எனக்கு ஒரு கண் குருடாக வேண்டும" என்றான். அவனது தய எண் ணமே அப்படி யோசிக்க வைத் தது. இவனுக்கு ஒரு கண் போனால் கறுப்பசாமிக்கு இரண்டு கண்ணும் போய்விடுமே என் பதுதான் அவனது ஆசை. நான் ஒரு கண்ணோடு உல கைப் பார்க்க முடியும். அவனுக்கு இரண்டு கண்ணும் போனால் குருடனாய் தடவித் திரிய வேண் டும். ஆகவே அப்படிக் கேட்டான்.

"சரி உனது விண்ணபத் தற்கு பதில் கொடுத்து விட்டேன. நீ வீட்டுக்குப் போகும்போது உனது ஒரு கண் குருடாகி விடும்" என்று கூறி தேவதை மறைந் தாள்.

தீய எண்ணம் கொண்ட அவன், கறுப்பசாமி குருடனாய்த் தடவித் திரிவதை நினைத்து சந்தோஷம் அடைந்தவனாய் தன் வீட்டிற்குச் சென்றான்.

அங்கே பக்கத்து வீட்டு கறுப் பசாமி இரண்டு கண்ணும் பார் வையுளளவனாய மாடுகளுககு தனி வைத்துக் கொண்டிருந் தான். அவனைப பார்த்தவுடன வெள்ளைச்சாமி அதிர்ந் தான். தேவதை மேல் கோபம் கோபமாய் வந்தது.



உடனே ஆற்றங்கரை மரத் தடிக்குச் சென்று கண்டபடி தேவதையைத் திட்டிக்கொண் டிருந்தான். அப்போது தேவதை வந்தாள்.

"ஏய் தேவதையே, என்னை ஏமாற்றி விட்டாய்" என்று கத்தினான். தேவதை பொறு மையாய் பதில் சென்னது.

"நான் உன்னை ஏமாற்ற வில்லை. நீ கேட்டதைக் கொடுத்திருக்கிறேன். அதா வது உனக்கு ஒரு கண்பாவை குருடானால் ஒரு கண்ணால் பார்க்கமுடியும் அல்லவா? நான் தேவதை கொடுப்பவள். எடுப்பவள் அல்ல. உனக்கு ஒரு கண் பார்வை கொடுத் தேன். அவனுக்கு இரண்டு கணகள் பார்வை கிடைத்தது. ஆகவே ஏமாற்றவில்லை" என்று கூறி மறைந்தது.

அவமானத்தால் தலை குனிந்து ஒரு கண்பார்வை யோடு வீடுநோக்கி நடந்தான வெள்ளைச்சாமி.

சிறுவர்களே! நாம் வெள் ளைச்சாமி போல யோசிக்கக் கூடாது. நல்லதையே நினைப் போம். நல்லதையே செய் வோம். கடவுளும் நமக்கு நல்லதையே செய்வார்.

## விடுகதைகள்

1. சிவப்பு பெட்டிக்குள் சில்லறை கொட்டிக்கிடக்கு அது என்ன?
2. சப்பி மூடியிருக்கும், சிரித்த கொண்டை போட்டிருக்கும், அரைத்த மஞ்சள் பூசியிருக்கும், அதன் மேலே கல் இழைத்திருக்கும். அது என்ன?
3. நெருப்பில் வெந்தவனுக்கு நீண்ட ஆயுள் அது என்ன?
4. மன்மதன் வில் என்பர் கடித்தாலோ கனருசி அது என்ன?
5. பொதி சுமக்கும் பாடகன் எட்டி உதைத்தால் எட்டுநாள் வலிக்கும் அவன் யார்?
6. பூட்டில்லாத பெடடிக்குள்ளே போட்டிருக்கும் வைரககல். வைரக்கல்லின் ஒளியில் வையகமே தெரியுதடா அது என்ன?
7. நடுக்காட்டில் திறந்து கிடக்கு தண்ணீர்ப்பானை அது என்ன?

விடைகள்
1. மிளகாய்வற்றல்
2. மாதுளம்பழம் 3. செங்கல்
4. கரும்பு 5. கழுதை
6. கண்கள் 7. கிணறு

சிறுவர் பாதுகாப்பு இலங்கை
யாழ்ப்பாணம்

# சச்சின் 25

## மீள் பார்வை

என்.சொக்கன்

## ஒரு புயலின் கதை

இரண்டாவது இன்னிங்ஸிலும் இங்கிலாந்து அணியின் பேட்டிங் சிறப்பாக இருந்தது. மிகவேகமாக 320ரன்கள் சேர்த்து அவர்கள் ஆட்டத்தை முடித்துக் கொள்ள, இந்தியாவுக்கு வெற்றி இலக்கு-88ஓவர்களில் 408ரன்கள்!

ஓர் ஓவருக்கு கிட்டத்தட்ட ஐந்து ரன்கள் எடுக்கவேண்டிய நிலையில், அந்த டெஸ்ட் போட்டியை இந்தியா வெல்வதற்கான வாய்ப்புகள் அநேகமாக இல்லை என்றே சொல்லலாம். மாலை வரை விக்கெற்றுகளைக் காப்பாற்றிக் கொண்டு நிதானமாக விளையாடி, போட்டியை டிரா செய்வதுதான் அப்போதைக்கு புத்திசாலித்தனமான முடிவு!

ஆனால் இந்தியாவின் துவக்கநிலை பேட்டிங் இந்த முறையும் பரிதபமாகப் பல் இளித்தது. 109 ரன்களுக்குள் நான்கு முக்கிய பேட்ஸ்மேன்கள் ஆட்டமிழந்துவிட, சச்சின் விளையாட வந்தபோது இன்னும் கிட்டத்தட்ட ஆறுமணி நேர ஆட்டம் மீதமிருந்தது. இந்திய அணி, தோல்வியின் உக்கிரப் பார்வையில் நடுங்கிக் கொண்டிருந்தது.

பிரதான ஆட்டக்காரர்களில் பெரும்பாலானோர் பெவிலியனுக்குத் திரும்பிவிட்ட நிலைமையில், பாக்கி இருக்கிற ஆறு விக்கெற்றுகளைக் காப்பாற்றி ஆட்டத்தை டிரா செய்வது கூட சிரமம் தான் என்கிற சூழ்நிலை. மைதானத்தின் தன்மையைப் புரிந்து கொண்டு, சச்சின் தனது ஆட்டத்தைத் துவங்கி சில ரன்கள் சேர்ப்பதற்குள் ,127 ரன்களில் ஐந்தாவது விக்கெற்றும் விழுந்துவிட்டது.

எந்த மைதானம் ஆனாலும் டெஸ்ட் போட்டியின் ஐந்தாவது நாளில் ரன்கள் சேர்ப்பது சிரமமான காரியம். போதாக்குறைக்கு, இந்தியா அப்போது விளையாடிக் கொண்டிருந்த மான்செஸ்டர் ஆடுகளம் பந்துவீச்சாளர்களுக்குச் சாதகமாக இருந்தது. இங்கிலாந்தின் முன்னணி பந்துவீச்சாளர்களான ஃப்ரேஸர், ஹெம்மிங்ஸ், மால்கம் மற்றும் லூயிஸ் தங்களின் முழுத் திறனையும் வெளிப்படுத்தி பந்து வீசிக் கொண்டிருந்தார்கள். பந்து



சரியானபடி பேட்டுக்கு எழும்பி வரததால் ஷாட்டுகள் விளையாடுவதோ, நான்கு, ஆறு ரன்களுக்கு முயல்வதோ மிகக் கஷ்டம்.

முதல் இன்னிங்ஸில் ஐந்து விக்கெற்களை வீழ்த்தியிருந்த ஃப்ரேஸர், தனது துல்லியமான தாக்குதலின் மூலம் சச்சினையும், உடன் விளையாடிக் கொண்டிருந்த கபிலையும் தொடர்ந்து சோதித்துக் கொண்டிருந்தார். ஒவ்வொரு ரன்னையும் போராடிப் பெறவேண்டியிருந்தது. அந்த நிலைமையில் ரன் எடுப்பதைவிட, அவுட் ஆகாமலிருப்பதே முக்கியம் என்று புரிந்தவர்களாக சச்சினும் கபில்தேவும் நிதானமாக ஆடிக் கொண்டிருந்தார்கள்.

இந்தியாவின் ஸ்கோர் 183க்கு உயர்ந்தபோது கபில்தேவ் ஆட்டமிழந்தார். சச்சினுடன் மனோஜ் பிரபாகர் இணைசேர்ந்துகொள்ள, இந்தியா மீண்டும் தோல்வியின் விளிம்புக்கு வந்தது.

ஆட்டம் முடிய இன்னும் கிட்டத்தட்ட மூன்று மணிநேரம் இருந்தது. இந்திய அணியிடம் மீதமிருப்பது நான்கே விக்கெற்றுகள். இப்போது விளையாடிக் கொண்டிருக்கும் சச்சின், பிரபாகரை அடுத்து, விக்கெற் காப்பாளர் கிரன்மோரே. அவர் ஓரளவு நன்றாக விளையாடுவார் என்று ஊகித்தாலும், அவரை அடுத்து வருகிற அனில் கும்ப்ளே, நரேந்திர ஹிர்வானி இருவரும் அவ்வளவாக பேட்டிங் பயிற்சியில்லாத பந்துவீச்சாளர்கள்.



இதை யோசித்த சச்சினுக்கும் பிரபாகருக்கும் ஒரு விஷயம் மட்டும் மிகத் தெளிவாகப் புரிந்தது. நாம் இருவரும் எவ்வளவு நேரம் ஆட்டமிழக்காமல் விளையாடுகிறோமோ அத்தனை நல்லது. கொஞ்சம் கவனம் சிதறினாலும் போதும் இங்கிலாந்து பவுலர்கள் அந்த சின்ன விரிசலுக்குள் புயலாகப் புகுந்து இந்திய அணியைப் பிளந்து தள்ளிவிடுவார்கள்.

ஏற்கனவே முதல் போட்டியில் தோற்றுவிட்டதால், இங்கேயும் தோற்றுப் போனால் போட்டித் தொடரை இங்கிலாந்து வென்றுவிடும்! (டிராவானாலும் போட்டித் தொடரை இங்கிலாந்துதான் வெல்லும்).

அந்தப் போட்டியில் இந்திய அணியின் தலைவிதி சச்சின், பிரபாகர் இருவரின் கைகளில் எழுதப்பட்டிருந்தது.

இந்த உண்மை புரிந்த பின்னர் சச்சின் அன்று விளையாடிய அந்த ஆட்டம், இன்று வரை அவனது மிகச் சிறந்த டெஸ்ட் இன்னிங்ஸ்களில் ஒன்றாகப் புகழப்படுகிறது. 'என்னைப் பார், என் அழகைப் பார்' என்று தொட்டு ஆடத் தூண்டும் ஏமாற்றுப் பந்துகளையெல்லாம் கவனமாகத் தவிர்த்து, அதே சமயம் பவுலர் தவறு செய்யும் போதெல்லாம், அவரைத் தண்டிப்பது போல் பந்துகளை எல்லைக் கோட்டுக்கு விரட்டித் தனது இயல்பான துறு துறுப்பைக் கட்டுப்படுத்திக் கொண்டு, ஆனவரை பந்தைக் காற்றில் அடிக்காமல் பொறுமை காத்து என தன் வயதுக்கு மிஞ்சிய பொறுப்போடு விளையாடிய சச்சின், லூயிஸ் பந்துவீச்சில் ஒரே ஓவரில் மூன்று பவுண்டரிகள் விளாசியதன் மூலம் தனது ஐந்தாவது அரை சதத்தைக் கடந்தான்!

(தொடரும்)

## சாவகச்சேரி வைத்தியசாலையில் சிறுவர் விடுதிக்கு அடிக்கல் நாட்டல்







(சாவகச்சேரி)

சாவகச்சேரி வைத்தியசாலையில் சிறுவர் விடுதித் தொகுதிக்கான அடிக்கல் நாட்டுவிழா நேற்று முன்தினம் நண்பகல் 12.30 மணிக்கு இடம்பெற்றது.

48 வார்ட்டுக்களைக் கொண்ட 2மாடிக் கட்டடத்தை அமைப்பதற்கென FIDR என்ற நிறுவனம் 20மில்லியன் ரூபா நிதியை வழங்கியுள்ளது.

சேவாலங்க நிறுவனத்தின் மேற்பார்வையின் கீழ் இக் கட்டடம் ஒரு வருடத்திற்குள் நிர்மாணம் செய்யப்படும்.

இவ் அடிக்கல் நாட்டு விழாவில் மங்கள விளக்கினை யாழ். அரச அதிபர் கே.கணேஷ் மற்றும் யப்பான் பிரதிநிதி ஆகியோர் ஏற்றினார்கள்.

ஆசியுரையினை போதகர் வசந்தகுமார் அடிகளார் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் மாகாண சுகாதார பணிப்பார்கள் மற்றும் திட்டப் பணிப்பாளர்கள், தென்மராட்சி பிரதேச செயலர், சாவகச்சேரி வைத்திய அதி காரி மற்றும் வைத் தியர்கள் ஆகி யோர் கலந்து கொண்டனர். (ந-108)

## நூல் வெளியீட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவ முதல்வர் சபையின் 'The Leader'எனும் நூல் வெளியீட்டுவிழா எதிர்வரும் 26 ஆம் திகதி புதன் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் சிரேஷ்ட-மாணவ முதல்வர் ச.சுஜென் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந் தினராக பேராசிரியர் குமாரவடிவேல் கலந்து சிறப்பிக்கவுள்ளார். இந்நூலின் ஆய்வுரையினை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை கணித ஆசிரியர் கே. ஸ்ரீ கணேஸ் நிகழ்த்தவுள்ளார். இந்நூல் யாழ்ப்பாண பிரபல பாடசாலை மாணவ முதல்வர்களின் ஆக்கங்களையும் தாங்கி வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். (ந)

## இடித்துவிட்டு தப்பிச்சென்ற ஓட்டோ


(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் 2.30 மணியளவில் கன்னாதிட்டி வீதி வழியாக சைக்கிளில் வந்து கஸ்தூரியார் வீதியைக் கடக்க முயற்சித்த இரு பெண் பிள்ளைகளை இடித்து விழுத்திய ஓட்டோ சாரதி ஒருவர், கீழே விழுந்தவர்களைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் தனது வாகனத்தை வேகமாக ஓட்டிச் சென்று விட்டதாக சம்பவத்தை கண்ணால் கண்டவர்கள் தெரிவிக்கிறார்கள்.


இவ் விபத்தினால் சைக்கிளில் சென்ற இரு பெண்களும் கால், கைகளில் காயமடைந்துள்ளனர். இவர்களுக்கு ஓட்டோ இலக்கம் தெரியுமாதலால் இதனைப் பொலிஸில் அறிவித்து பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொண்ட ஓட்டோ சாரதி மீது சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகத் தெரிகிறது. (து)

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

## அன்பான தாய், தந்தையராலேயே ஆரோக்கியமான சிறுவா்களை வளா்க்க முடியும்



"இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்'' என்பது வெறும் வசன நடைமட்டுமல்ல. அது யதார்த் தமானதும் கூட. சிறுவர்கள் எவ்



விதம் வளர்க்கப்படுகின்றார்களோ, அவ்விதமே இந்த சமூகம் அவர்க ளிடமிருந்து விளைச்சலைப் பெற முடியும்.

'சப்பி'யை விதைத்துவிட்டு நெல் மணிகள் விளையும் என எதிர்பார்ப பது எவ்வகையிலும் நியாயமாகாது. அதேபோன்றதுதான் சிறுவர்களின் வளர்ப்பும்.

நல்ல சூழ்நிலையில், ஆரோக்கிய மான பண்பாட்டு விழுமியங்களில், அன்பின் அரவணைப்பில், இறை நம பிககையில் வளர்க்கப்படும் பிள்ளை கள எதிர்காலத்தில் அன்புடையவர்க ளாக, சமூக ஒத்திசைவுடையவர்க ளாக மனித விழுமியங்களை மதிக் கும் - நேசிக்கும் இயைபுடையவர்க ளாக மிளிர்வாாகள்.

இந்த உண்மையை பெற்றோர் களும், உறவினர்களும், சமூக உறுப் பனர்களும் உணர்ந்து கொள்கின்ற போதே மேற்கூறப்பட்ட விடயம் சாத் தியமாகும்.

### கருவுற்ற நாள் முதலாய்...

ஒரு மனிதனின் நடவடிக்கை கள் அவனது இயல்புகள் பற்றி நாம் பலவாறு விமர்சிக்கின்றோம். இவ வமர்சனம் நேர்த்தன்மையானதாக அல்லது எதிரானதாக அமையலாம். இவவிதமான விமர்சிப்புகள் அனைத் துமே அவனது தனிப்பட்ட சொத் துரிமையாக்கப்படுகின்றது.

இங்குதான் விமர்சிப்பாளர்கள் தவறிழைத்து விடுகின்றார்கள்.

"மனித தவறு'' இடம்பெறுகின்ற போது அதுபற்றிய விமர்சிப்புகள் அனைத்தும் சமகாலத் தளத்தில் இருந்தவாறு மேற்கொள்ளப்படுகின் றதே தவிர, மனித தவறுக்கான பின் புலம், தவறிழைத்தவர் வளர்க்கப் பட்ட முறைமை, வளர்ந்த சூழல் பற்ற யாருமே சிந்திப்பதில்லை.

உண்மையில் மனித தவறின் தோற்றுவாய் என்பது அவன் கரு வுற்ற காலத்தில இருந்தே ஆரம்பிக் கப்படுகின்றது.

ஆம், இது அதிசயமான செய்தி யல்ல. விஞ்ஞான உலகினால் நிருபிக் கப்பட்ட உண்மை.

ஒரு தாயின் கர்ப்ப காலத்தில், இருக்கக்கூடிய அகம் - புறம் சார்பான நிலைகள் குழந்தை மீதும் தாக் கத்தை ஏற்படுத்துகின்றது.



இந்த உண்மையை உறுதப்படுத துவதாக பாரத இதிகாசத்தல் வரும் கதை யைக் கூறமுடியும்.

"அருச்சுனனின் மனைவி சுபத்திரை கர்ப்பமுற்றிருக்கின்றாள். வில்லுக்குப் பேர் போன அருச்சுனனுக்கு போர்க் களததில் வியூகம் உடைக்கும நுட் பத்தை பார்த்தசாரதி கூறுகின றான்.

இவ்வாறு வியூகத்தை உடைக்கும் நுட்பத்தை, பார்த்தசாரதி கூறும போது, சுபத்திரையின் வயிற்றில் வள ரும் அபிமன்யு குழந்தை அந்த நுட பத்தை உள்வாங்கிக கொள்கின்றது.

இது இதிகாசக் கதையாக இருந் தாலும், அதற்குள் இருக்கக்கூடிய தத்துவார்த்தம், விஞ் ஞான உண்மை, பற்றி நாம் சிந்திப்பது அவசியமான தாகும்.

இவ்வாறு ஒரு குழந்தை, தாயன் வயிற்றில் இருக்கும் போது கற்கத் தொடங்கி விடுகின்றது.

இதற்கேற்றவாறான சூழ் நிலை களை ஏற்படுத்திக கொடுப்பதில் ஒரு தந்தை பெரும் பஙகு வகிக்கின் றான்.

இதனையே, 'பிறர் பிள்ளை தலை தடவ தன பிள்ளை தானே வளரும்' என்ற தமிழ்ப் பழமொழி வலியுறுத்து கின்றது.

ஒரு கணவனானவனுக்கு அவனது மனைவி பிறர் பள்ளைதானே! அந் தப் பறர் பிள்ளையான மனைவியை செம்மையாக - ஆரோக்கியமாக- மகிழ வாக வாழவைக்கின்ற போது அவ ளின் வயிற்றில் வளர்கின்ற அவனது பிள்ளை நல்லாரோக்கியமாக வளரும் அல்லவா? இதுவே அந்தப் பழமொழி யின் பொருள்.

'அந்தப் பழமொழிக்குள் இருக்கக் கூடிய இன்னுமோர் விடயம், சிறு வர் உரிமை பற்றியதாகும்.

பிறர் பிள்ளை தலை தடவ என் பது சிறுவர்களை அடிககாது, அதட் டாது, அச்சுறுத்தாது தலை தடவி னால் (அனபு செலுத்தினால்) அந்தப் பிள்ளை எத்துணை மகிழ வடை யும்.

இவ்விதம் தலைதடவி அன்பு செலுத்தும் ஒருவராலேயேதான் பெற்ற பிள்ளைகளுடனும் அன்பாக- மகிழ்வாக நடந்துகொள்ள முடியும்.

அவ்வாறு நடந்துகொள்ளும போது அவரின் பிள்ளையின் வளர்ச்சி ஆரோக்கியமாக அமையும் என்ப தில் எந்த ஐயமுமில்லை.

பிறர் பிள்ளைகளுடன் சீறிப் பாயும எந்தத் தநதையாலும், தாயாலும் தனனுடைய பிள்ளையிடம் ஆத்மார்த தமான அன்பைச் செலுத்தமுடியாது.

இந்த உண்மைய உணர்ந்து கொணடால் எங்கள் சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்று சங்கே முழங்கலாம்.

**விஜயன்**



சுனாமிக்குப் பின்னர் மருதங்கேணி எச்.ரி.எம்.எஸ் மாணவர்கள் ஆர்வத்துடன் கற்றலில்.... *(படம்: விஷ்ணு, சிவா, திகதி-10.10.2005)*

**அன்பார்ந்த மாணவர்களே!**

உங்கள் வலம்புரியில் திங்கட்கிழமை தோறும் வெளிவரும் 'இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்' பகுதியை தவறாது வாசியுங்கள். வெகு மதியான பரிசில்களுடன் உங்களுக்கான போட்டிகள் காத்திருக்கின்றன.

**சிறுவர் பாதுகாப்பு இலங்கை யாழ்ப்பாணம்**

வறுமைப்பேய் நாட்டைவிட்டு அகன்றால் கல்வித் துறையிலும் பல நலன்கள் நிகழக் காணலாம்.

- பெர்னார்ட்ஷா

வலம்புரி

## பாடசாலை அனுமதியில் ஆதிக்கம்செலுத்தும் 'டொனேசன்'

2006 ஆம் ஆண்டுக்கான மாணவர் அனுமதி இப்போது சூடுபிடித்துள்ளது. தரம் 1, தரம் 6 ஆகிய இரண்டு தரங்களுக்காக பிரபல பாடசாலைகளில் அனுமதிகளைப் பெறுவதற்கான முயற்சியில் பெற்றோர் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர்.

தரம் 6 இற்கான அனுமதிகளை புலமைப் பரிசில் புள்ளிகள் தீர்மானித்துக்கொள்வதால் அங்கு அனுமதிபெறுவதில் அதிக பிரச்சினைகள் ஏற்படவாய்ப்பில்லை. எனினும் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தாலும் தேசிய பாடசாலைகள் முதல் ஏனைய பிரபல்யமான பாடசாலைகள் வரை "டொனேசன்" என்ற விடயத்தில் விட்டுக்கொடுக்கப்போவதில்லை.

பாடசாலைகள் "டொனேசன்" பெறுவது தடைசெய்யப்பட்டுள்ள போதிலும் அது ஏதோவோர் வழிமுறையில் நடந்துகொண்டே இருக்கின்றது. குறிப்பாக தரம் 1 இற்கான அனுமதியில் டொனேசன் பாதாளம் மட்டும் பாயவே செய்கின்றது.

பிரபல்யமான ஆரம்பப்பாடசாலைகளுக்கு அண்மையில் வசிக்கும் பிள்ளைகளுக்கு அனுமதி வழங்காது மிகத் தூர இடங்களிலுள்ள பிள்ளைகளுக்கு அனுமதிவழங்கும் நடைமுறைகள் மிகவேதனைக்குரியவை.

இங்குதான் "டொனேசன் கலாசாரமும், செல்வாக்குக் கலாசாரமும்" வேலைசெய்கின்றது. பிரபல்யமான ஆரம்பப் பாடசாலைகளுக்கு மிக அண்மையில் வசிக்கும் பிள்ளைகளின் விண்ணப்பங்கள் "தூரம் அதிகம்" என்ற வாசகத்துடன் நிராகரிக்கப்பட்டு விடுகின்றன.

அல்லது விண்ணப்பித்த பிள்ளைகளின் விலாசங்களுக்கு கடிதங்களை அனுப்பாது அவை அப்படியே குப்பைத் தொட்டிக்குள் வீசப்படுகின்றன. சிலவேளைகளில் தட்டிக்கழிக்க முடியாத அளவில் பாடசாலையின் எல்லையும், பிள்ளையின் வசிப்பிடமும் மிக நெருக்கமாக இருந்தால் "டொனேசன்" தொகைமூலம் அந்தப் பிள்ளைகளின் அனுமதி நிராகரிக்கப்படுகின்றது.

டொனேசன் பெற்றுக்கொள்வது அரச பாடசாலைகளில் தடைசெய்யப்பட்டுள்ள போதிலும், டொனேசன் இல்லாமல் பாடசாலைகளை நிறைந்த வளங்களுடன் இயக்கமுடியுமா என்ற கேள்வியை பாடசாலை நிர்வாகங்கள் எழுப்பலாம்.

அவ்வாறான கேள்விக்குள் ஓரளவான நியாயங்கள் இருந்தாலும் டொனேசன் யாரிடம் பெறலாம், யாரிடம் பெறக்கூடாது என்ற "அறநெறி" பின்பற்றப்படவேண்டும். டொனேசன் வேண்டுவதன் மூலம் ஏழைப் பிள்ளைகள் பாதிக்கப்படுமாயின் அந்தப் பாதகச் செயலை எந்தப் பாடசாலை நிர்வாகமும் செய்தல்கூடாது.

இதனையே டொனேசன் வேண்டாம் பெரியவர்களிடம் பெற்றோர்கள் இரந்து கேட்கிறார்கள்.

### ரணிலுடன் மஹிந்த விவாதம் நடத்தவேண்டும்

# பகிரங்க விவாதத்திற்கு சக்தியில்லையெனில் அது மிகவும் துரதிஷ்டவசமானது-அனுரா சாடல்

(கொழும்பு)

ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பைஏற்று சுதந்திரக்கட்சி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ நேரடி விவாதம் நடத்தவேண்டும் என்று வெளி





விவகார அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகத் தான் தெரிவாகியிருந்தால் பகிரங்க விவாதத்திற்கு வருமாறு நாடு முழுவதும் சென்று பிரசாரம் செய்வதற்கு ரணில் விக்கிரமசிங்கவிற்கு இடமளித்திருக்க மாட்டேன் என்ற அனுரா பண்டாரநாயக்க, தான் வேட்பாளராக இருந்திருந்தால் ரணில் விக்கிரமசிங்கவின் சவாலை எப்போதோ ஏற்றுக்கொண்டிருப்பதாகவும் கூறினார்.

ரணில் மற்றும் மஹிந்தவின் தேர்தல் அறிக்கை கள் வெளியாகி உள்ளன. அவற்றிலிருக்கும் விடயங் கள் குறித்து மக்கள் உணர்ந்து கொள்வதற்காக பிர தான



வேட்பாளர்கள் இரு வரும் கட்டாயமாக பகி ரங்க விவாதமொன்றிற் குச் செல்லவேண்டும் என றும் அனுரா பண்டார நாயக்க குறிப்பிட்டுள் ளார்.

அமெரிக்கா, இங்கிலாந்து,ஜப்பான், ஜேர் மனி ஆகிய நாடுகளில் இப்படியான வழக்கம் இருப்பதாகக் கூறிய அனுரா, நாட்டைக் கட்டியெழுப்ப முன்வரும் ஒருவரால் தன்னை எதிர்த்து நிற்கும் வேட்பாளருடன் பகிரங்க விவாதத்திற்குச் செல்வதற்கு சக்தியில்லையெனில் அது மிகவும் துரதிஷ்டவசமானநிலை என்றும் மறை முகமாக மஹிந்தவை அனுரா சாடியுள்ளார்.

ஏதேனும் காரணத்தினால் ரணில் விக்கிரமசிங் கவை எதிர்த்து விவாதம் செய்வதற்கான வாய்ப்பு தனக்கு தனக்கு கிடைத்தால் முதல் சுற்றிலேயே ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடித்துவிடுவேன் என்றும் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார். (ற)

# மரண நகரமாக இருக்குமென எண்ணிய யாழ்ப்பாணத்தின் நிலை வியப்புக்குரியது

### புதிய நெதர்லாந்துத் தூதுவர் பாராட்டு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் பயணத்தடை எதிர்பாராதது என்று இலங்கைக்கான புதிய நெதர்லாந்து தூதுவர் வன் டிஜித் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறியுள்ளதாவது,

இலங்கையில் அமைதிப் பேச்சுக்கள் இடைநிறுத்தப் பட்டிருந்தாலும் யுத்தநிறுத்த ஒப்பந்தம் நீடிக்கிறது. யுத்தநிறுத்த ஒப்பந்தம் சீர்குலைந்து வருவதாக பலரும் வருத்தம் தெரிவித்துவருகின்றனர். இனப்பிரச்சினையில் தொடர்புடைய இரு தரப்பினரும் விட்டுக்கொடுத்து செல்லவேண்டும். அமைதி முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதில் அனைத்துத் தரப்பினருக்கும் பொறுப்பு உண்டு.

அண்மையில் யாழ் .சென்றிருந்தபோது நான் கற்பனை செய்திருந்த யாழ்ப்பாணம் வேறு என்பதை உணர்ந்துகொண்டேன். அது ஒரு மரண நகரமாக இருக்கும் என்று எண்ணினேன். ஆனால் எனது பயணத்தின்போது வியப்புக்குள்ளானேன். அசாதாரண சூழ்நிலைகளை அந்த மக்கள் எதிர்கொண்டிருக்கும்விதம் ஆச்சரியமளிக்கிறது.

ஆழிப்பேரலை நிவாரண நிதிக்காக நெதர்லாந்து அரசாங்கமானது 15 மில்லியன் யூரோ அளித்துள்ளது. அமைதிப் பேச்சுக்களில் அனுசரணையாளராக செயற்படும் நோர்வேயின் பங்களிப்பை சில ஊடகங்கள் விமர்சனம் செய்வது வருத்தத்திற்குரியது. நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் நோர்வே அனுசரணையாளர்கள் இப் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த செப்டம்பர் 26ஆம் திகதி ஐரோப்பிய ஒன்றியம் விதித்த பயணத்தடையானது எதிர்பாராதது. அது அரசியல் காரணங்களுக்காகப் பயன்படுகிறது. இலங்கையில் அமைதி தொடர்ந்தால் பொருளாதார வளர்ச்சியும் படிப்படியாக உயரும் வாய்ப்புகள் உள்ளன.

ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகளை மேற்கொள்வதில் பாரிய தடைகளை இலங்கை அரசாங்கம் எதிர்கொண்டிருப்பதால் அதன் பணிகள் முழுமையடையாமல் உள்ளன. இப்பணிகள் நிறைவடைய ஒரு குறிப்பிட்ட காலமாகும் என்றார் அவர். (ற)

# தமிழருக்கு உரிய தீர்வு வழங்கப்படாவிடின் பிரிவினையை சர்வதேசம் ஆதரிக்க வேண்டும்

### பேராசிரியர் எஸ்.வீரகொட

தேர்தலில்வென்று ஜனாதிபதியாபவர் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தருபவராக இருத்தல்வேண்டும். இல்லையெனில் இலங்கையிலிருந்து பிரிந்து தனிநாட்டினை அமைக்கும் சந்தர்ப்பத்தை சர்வதேச சமூகம் தமிழ்மக்களுக்கு வழங்கவேண்டும் என சிங்கள கல்விச் சமூகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுகுறித்து பேராசிரியர் எஸ்.வீரகொட கூறுகையில், இலங்கையில் நீடித்துச் செல்லும் பிரச்சினையால் அனைத்து சமூகங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக தமிழ்மக்கள் பல இழப்புக்களை சந்தித்துள்ளனர். இலங்கையை மரணங்கள் மலிந்த பூமியாக தொடர்ந்தும் வைத்துக்கொண்டிருக்கமுடியாது. இன்றைய நவீன காலத்தில் ஏமாற்றிவிடமுடியாத ஓர் தலைவராக, தமிழ் மக்களின் தலைவ்ராக வேலுப்பிள்ளை பிரபாகரன் இருக்கிறார். அவர்கள் நீண்டகாலமாக உரிமைகளை கேட்டு போராட்டம் நடத்துகிறார்கள். ஐக்கிய நாடுகள் விதிகளின்படி நீண்டகாலப் போராட்டம் நடத்தும் ஒரு சமூகம் பிரிந்துசெல்வதற்கான உயர் தகுதியினைப் பெற்றுள்ளது.

இந்த வகையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள சமூகம் தமிழ் மக்களை அரவணைத்து உரிமைகளை வழங்கப்போகிறதா? அல்லது தமிழ் மக்கள் தாமாகவே உரிமைகளைப் பெற்றுக்கொள்ள நாம் வழிசமைக்கப்போகிறோமா என்பதை ஒவ்வொரு சிங்களவரும் சிந்திக்கவேண்டும். அதேபோன்று தமிழ் மக்களுக்கு ஒரு பாரிய பொறுப்புள்ளது. முதன்மை வேட்பாளர் ஒருவருக்கு வாக்களித்தும் நாம் ஏமாந்து விட்டோம் எனக் கூறக்கூடாது. தமக்கு விடுதலை பெற்று உரிமைகளை வழங்கக்கூடியவர்களுக்கே அவர்கள் வாக்களிக்க வேண்டும் என்றார்.

லங்கா வெப் என்ற இணையத்தளத்தின் ஆசிரியர் அஜித் பெரகுமஜயசிங்க கருத்துக் கூறுகையில்,

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் எவருமே தமிழ் மக்கள் சார்பில் போட்டியிடவில்லை. இந்த நிலையில், இரு பிரதான வேட்பாளர்களில் ஒருவருக்கு ஆதரவு அல்லது வாக்களிக்க வேண்டிய நிலைக்கு தமிழ் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.கடந்த காலங்களில் தமிழ் மக்களை சிங்களத் தலைமைகள் ஏமாற்றியது வெளிப்படையான உண்மை. முதன்மைவேட்பாளருக்கு ஆதரவு அளிப்பதன் மூலம் சர்வதேச சமூகம் இதனை தவறாக புரிந்துகொள்ளும் வாய்புக்கள் உள்ளன. எனவே தமிழ் மக்களின் வாக்குகள் எந்தப்பக்கம் என்பது உலகநாடுகள் கூர்ந்து கவனிக்கும் என்றார். (ற)


### தினசரி தியானம்

**விவேகச் சிந்தனை**

சிதறியோடும் மனதை இழுத்துப் பிடித்து மீண்டும் தியானப் பொருளின் மீது வலுக் கட்டாயமாக நிலைநிறுத்துவதும் அப்பியாசம்தான். உண்மையில் அது நமக்கு நமது மனத்திற்கும் இடையே நடக்கும் ஒரு பெரிய் போராட்டம் என்றே சொல்ல வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்





சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியைச் சேர்ந்த லெப்.கேணல் சேகரின் 5 ஆம் ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் நேற்று நடைபெற்றன. இதில் சாள்ஸ்அன்ரனி சிறப்புப்படையின் சிறப்புத்தளபதி வீரமணி தமிழீழ தேசியக்கொடி ஏற்றுவதையும் வெற்றி பெற்ற அணிக்கு கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# கட்டுநாயக்காவில் பலியான பெண்ணிற்கு நட்டஈடு கோருகிறது அந்நாட்டு அரசாங்கம்

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானநிலையத்தில் இந்தோனேசியப் பெண் இறந்ததை அடுத்து இலங்கை அரசாங்கத்திடம் இருந்து இந்தோனேசியா நட்டஈடு கோரியுள்ளது.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் அண்மையில் ஏற்பட்ட விபத்தில் இந்தோனேசியாவைச் சேர்ந்த இரண்டு குழந்தைகளின் தாயான முஸ்கானா தின்டி ஜெயென் (வயது 37) என்பவர் உயிரிழந்தார்.

டுபாயில் பணிக்குச்செல்ல அவர் கொழும்பில் இருந்து விமானம் மாறுவதற்காக இறங்கிய போதே இந்த விபத்தில் பலியானார்.

இறந்த பெண்மணிக்கான நட்டஈட்டுத் தொகையாக ரூபா 10 இலட்சத்தை இந்தோனேசியத் தூதரகம் கோரியிருந்தது.

அதைச் செலுத்த சிறிலங்கா ஏர்லைன்ஸ் விமான நிறுவனமும் ஒப்புக்கொண்டிருந்தது.இது குறித்து கருத்துத்தெரிவித்த சிறிலங்கா ஏர்லைன்ஸ் விமான சேவையின் தலைமைத்தகவல் தொடர்பு அதிகாரி சந்தான டி சில்வா காப்பீட்டுத் தொகைவிடயங்களை இறுதிசெய்வதற்காக பொலி ஸாரின் விசாரணை அறிக்கைக்கு காத்திருக்கிறோம்.

விபத்தில் இறந்த பெண்ணின் குடும்பத்திற்குரிய நட்டஈட்டுத் தொகை அளிக்கப்படும் என்றார். (ற)

# சட்ட விரோத மணல் அகழ்வு ஹண்டர் மீது துப்பாக்கிச்சூடு

## குடவத்தையில் சம்பவம்

(துன்னாலை)

சட்ட விரோதமான முறையில் மணல் அகழ்ந்து சென்ற ஹண்டர் மீது இனந்தெரியாதோரால் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் ஹண்டர் வாகனம்சேதத்திற்குள்ளானது. கடந்த வெள்ளிக்கிழமை இரவு 10.30 மணியளவில் குடவத்தை பிள்ளையார் கோயிலடியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

துன்னாலைப் பகுதியில் மணல் அகழ்ந்து கொண்டு குடவத்தைப் பிள்ளையார் கோயில் ஊடாகச் சென்றபோது அப்பகுதியில் மறைந்திருந்த இனந்தெரியாதோர் இத்தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

எனினும் சாரதி வாகனத்துடன் தப்பிச்சென்றுள்ளார். இச்சம்பவத்தினையடுத்து அப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது. (ச-101)

# வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட சுகாதார சேவை ஊழியர்களின் அன்றைய தின ஊதியம் வெட்டு

(கொழும்பு)

சுகாதாரத்துறை தொழிற்சங்கங்களினால் கடந்த 19 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தப்போராட்டத்தில் கலந்துகொண்ட சுகாதார சேவையாளர்களின் அன்றைய தின ஊதியம் இரத்துச்செய்யப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் விடுமுறை எடுக்காது வேலை நிறுத்தப்போராட்டத்தில் கலந்துகொள்ளும் சுகாதார ஊழியர்களுக்கு அன்றைய தினத்தை சம்பளமில்லா விடுமுறை தினமாக்குவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்கவுள்ளது.

கடந்த 19 ஆம் திகதி நடாத்தப்பட்ட வேலை நிறுத்தப்போராட்டத்தில் 21 சுகாதாரத்துறை தொழிற் சங்கங்கள் கலந்து கொண்டன.

நான்கு கோரிக்கைகளை முன்வைத்து எதிர்வரும் 27 ,28 ஆம் திகதிகளில் நாடளாவிய ரீதியில் இவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

# அத்துரலிய ரத்ன தேரருக்கு எதிராக நாடளாவிய ரீதியில் போராட்டங்கள்

## முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி அறிவிப்பு

(கொழும்பு)

1983 ஆம் ஆண்டு இனக்கலவரங்களுக்கு முஸ்லிம்களே காரணம் என்று கருத்துத் தெரிவித்துள்ள ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் அத்துரலிய ரத்ன தேரருக்கு எதிராக நாடு தழுவிய ரீதியில் கண்டன ஆர்ப்பாட்டங்ளை நடத்தவுள்ளதாக முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

முஸ்லிம் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் முஜிபுர் ரஹ்மான் ஊடகவியலாளர்களிடம் இது தொடர்பில் கூறுகையில், சிரச தொலைக்காட்சியில் கடந்த 13 ஆம் திகதி பேசிய அத்துரலிய ரத்ன தேரர் முஸ்லிம்களை அவமதிக்கும் கருத்துக்களை வெளியிட்டார்.

1983 ஆம் ஆண்டு யூலை தமிழர் படுகொலைகளுக்கு முஸ்லிம்களே காரணம் என்று குற்றஞ் சாட்டியிருந்தார். இதற்கு கண்டனம் தெரிவித்து நாடு தழுவிய அளவில் கண்டனப் போராட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

தேர்தல் களம் இரு முகாம்களாகத்தான் உள்ளது. இனவாதிகள் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலும் இனங்களுக்கு இடையே சமத்துவத்தை வலியுறுத்துவோரணில் தலைமையிலும் அணி சேர்ந்துள்ளனர்.

அத்துரலிய ரத்ன தேரரின் கருத்துக்கள் தொடர்பாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உரிய விளக்கம் அளிக்க வேண்டும்.

மகிந்த ராஜ பக்ஷ அணியில் இருந்த போதும் மகிந்தவை இனவாதிக்குழுக்களின் தலைவராக புதிய இடது முன்னணித்தலைவர் வாசுதேவ நாணயக்கார கூறியுள்ளதை வரவேற்கிறோம் என்றார்.(ற)

# பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள அரச அலுவலகங்கள், உள்ளூர் ஆட்சி மன்றங்களில் கடமையாற்றும் பதவி நிலை உத்தியோகத்தர்கள், இடை நிலை உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உதவியாளர்களுக்கான ஒரு நாள் பயிற்சிப் பட்டறை வடக்கு கிழக்கு மாகாண முகாமைத்துவ பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படவுள்ளது. (து-47)

# வீரமைந்தர் கௌரவிப்பு விழா

சாவகச்சேரி அரிமாக்கழகத்தின் வீரமைந்தர் கௌரவிப்பு விழா இன்று பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

க.பொ.த உயர்தரப்பரீட்சையில் சாதனை பெற்ற அல்லாரை வடக்கைச்சேர்ந்த சி.மயூரன் மற்றும் கோயில் கேணியில் நீரினுள் மூழ்கிய சிறுவனை காப்பாற்றியதற்காக தேசிய வீரமானிடர் விருது விழாவில் வீரக்குடிமகன் வீரப்பதக்கம் பெற்ற பாலாவி வடக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த து.குமரநாதன் ஆகியயோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாவட்ட இணைப்பாளர் லயன் ஜெ.முத்துக்குமாரசாமி மற்றும் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் றெஜினா இருதயநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-108)

# சுனாமி இடைத்தங்கல்...

சமயம் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முகாமிற்கு முன்பாகவுள்ள வீடொன்றில் முன்பக்க மதில் துவாரம் ஊடாக மறைந்திருந்து ரி - 56 ரகத் துப்பாக்கிமூலம் இனந் தெரியாத நபர்களினால் இராணுவச் சிப்பாய்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்டதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது. இருந்தபோதிலும் முகாமில் தங்கியுள்ள பொது மக்களின் தகவலின்படி இராணுவச்சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி தற்செயலாக வெடித்ததனாலேயே இச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-04,19)

# ஜனாதிபதி வேட்பாளர்கள்...

நாங்கள் கோரப்போவதில்லை.

தமிழீழப் பகுதிகளில் ஜனாதிபதி வேட்பாளர்கள் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்படுவார்கள். அதற்கு அவர்கள் முன் அனுமதியைப் பெற வேண்டுமென்றார்.

முன்னைய தேர்தல் காலங்களில் சோதனைச்சாவடிகளில் தமிழ் மக்கள் வாக்குகளைச் செலுத்த விடாமல் தடுக்கப்பட்டனர்.

கடந்த 2001 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் 80 ஆயிரம் வாக்காளர்கள் வாக்களிக்கவிடாமல் தடுக்கப்பட்டனர். இது அடிப்படை மனித உரிமை மீறல் என்று பின்னர் இலங்கை உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் எந்தவொரு வேட்பாளர்களையும் ஆதரிக்க மாட்டார்கள் எனதயா மாஸ்ரர் மேலும் தெரிவித்தார். (சு)

அன்பு வாசகர்களே...

உங்கள் வலம்புரியின் ஆறாவது ஆண்டின் நிறைவில் பல பக்கங்களைக்கொண்ட

வரலாற்று ஆவணச் சிறப்பிதழ்

வெளிவரவுள்ளது.

கல்வி, மருத்துவம், உளவியல், சோதிடம், ஆன்மீகம், விஞ்ஞான ஆராய்ச்சிகள், வரலாறு, பொருளியல், சமூகவியல், அரசியல், கவின்கலை தொடர்பான பல்துறைசார் ஆக்கங்கள் இச்சிறப்பிதழில் இடம்பெறவுள்ளன.

துறைசார் அறிஞர்கள், எழுத்தாளர்கள், மாணவர்களிடம் இருந்து ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்.

உங்கள் ஆக்கங்களை

பிரதம ஆசிரியர்

வரலாற்று ஆவணச் சிறப்பிதழ்

வலம்புரி

பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

நிறைவு விழாச் சபை, வலம்புரி

மனோகரா யாழ்.

பார்த்திபன் . லட்சுமிராய். வடிவேல் நடித்த

குண்டக்க மண்டக்க...

கா.நே.10.30.02.30.06.30.09.30(பு.நே)

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.

ஆர்ஜா, சோனியா்அகர்வால் நடித்த

ஒரு கல்லூரியின் கதை

கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30(பு.நே)

தீபாவளி வெளியீடு

தனுஷ் நடித்த

அது ஒரு கனாக்காலம்

நிறைஞ்சனாஸ் சங்கானை

சரத்குமார் (இரு வேடங்களில்)

நமீதா . வடிவேல் நடித்த

சாணக்கியா

கா.நே: 11.00, 02.45, 6.00, (பு.நே)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.